Registered as a Newspaper

நிரு
ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.
89 A/L
PAPER CLASS
Phy — சௌந்தி
Tu - Thu - 4.00
Che — செல்வா
Sat - Sun - 2.30
Bot — பாலா
Sat - Sun - 3.30
Zoo — ஞானம்
Sat - Sun - 8.15

# உதயன்

விலை ரூ 2. 50

NIRU TUITION CENTRE
Kondavil.
A/L 89
PAPER CLASS
Eco - சின்னத்தம்பி
சனி. ஞா - 5.00 p.m.
Acc - மரியதாஸ்
திங் - புதன் - 6.00 a.m.
Com - தேவா
செவ் வியா 6.30 a.m.
DAY CLASS - 89
காலை - 7.00 - 10.00 வரை
நடைபெறுகின்றன.

சுடர்: 4 விபவ ஆண்டு தை மீ 18 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 22 (31-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 58

## காரைநகரில் மோதல்: 2 கடற்படையினர் பலி

### ஹெலியிலிருந்து சூடு!!

காரைநகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் ஸ்ரீலங்கா கடற்படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர் என்றும் சிலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தை அடுத்து முகாமை அண்டிய பகுதிகளில் கடற்படையினர் ஹெலிக்கொப்டரிலிருந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் பதற்றம் அடைந்த இப்பகுதி மக்கள் இடம்பெயரத் தொடங்கினர்.

காரைநகர் மேற்கு வீதியில் போக்குவரத்தும் தடைப்பட்டது.

சில வீடுகள் சேதமடைந்ததாகவும். மீனவர்கள் தாக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. [ஒ-73]

## காலைவேளையில் வேட்டுகள்!

காரைநகர், ஜன 31

காரைநகர், வலந்தலைப் பகுதியில் ஞாயிறு இரவும் திங்கள் அதிகாலையும் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன

இதனை அடுத்து நேற்றுக் (திங்கட்கிழமை) காலை போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்தன

எனினும் சில மணித்தியாலங்களில் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (ஒ-73)

## வடமராட்சியில் ஊரடங்கும், நீக்கமும்

வல்வெட்டித்துறை, ஜன 31

வடமராட்சியின் சில பகுதிகளில் நேற்றுக் காலையில் திடீர் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது எனினும் சற்று நேரத்தில் ஊரடங்கு ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு ஊரடங்கும், ஊரடங்கு நீக்கமும் அறிவிக்கப்பட்டது

பருத்தித்துறை அந்தியடி என்ற இடத்தில் நிகழ்ந்த அசம்பாவிதம் ஒன்றை அடுத்தே இவ்வாறு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (உ-160)

## ஜனாதிபதி பிரேமா 6 இல் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஜன 31

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒருவரின் தலைமையில் சிரேஷ்ட பொலீஸ் உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று இன்று யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது.

ஜனாதிபதியின் வருகையை அடுத்து கோட்டை 'கிங்ஸ் ஹவுஸ்' திருத்தப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி திரு. பிரேமதாச தேர்தல் பிரசாரத்துக்காகவே இங்கு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவருடன் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும் வரவுள்ளனர். [ஒ-10]

## தெற்கில் மீண்டும் 'பிரா'

கொழும்பு, ஜன. 31

தென் பகுதியில் மீண்டும் 'பிரா' இயக்கம் தலை தூக்கியிருப்பதாக கூறப்படுகிறது.

மொனறாகலையில் தம்பல வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை கத்திக் குத்துக் காயங்களுடன் இரண்டு சடலங்களைப் பொலீஸார் கண்டனர்.

அவற்றின் அருகே 'பிரா இயக்கம்' என்று எழுதப்பட்ட அட்டை ஒன்று காணப்பட்டது.

அன்றைய தினம் கல்கமுவயிலும் சடலம் ஒன்று மின்கம்பத்தில் கட்டப்பட்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இச் சடலத்திற்கு அருகே கொலைக்கு 'பிரா' இயக்கம் உரிமை கோரியதைக் குறிக்கும் அட்டை ஒன்று காணப்பட்டது (உ-எ)

## கொழும்பு பொலிஸ் தாக்குதல்: 50 பேர் விசாரணையில்

கொழும்பு, ஜன 31

கொழும்பு மாவட்டத்தில் கடந்த சனி இரவு இடம்பெற்ற மூன்று பொலீஸ் நிலையங்கள் மீதான தாக்குதல் சம்பந்தமாக 50 பேரை இலங்கைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இவர்களில் சிலர் தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### 'யு. எஸ். எயிட்' நிறுவனம் வழங்கும்:

# வடமாகாண அபிவிருத்திக்கு 225 கோடி ரூபா!

## இன்று யாழ் செயலகத்தில் விரிவான ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜனவரி 31

வடமாகாண அபிவிருத்திக்கு 'யு. எஸ். எயிட்' நிறுவனம் ஏழரைக் கோடி டொலரை (ஏறத்தாழ 225 கோடி ரூபாவை) வழங்க முன்வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த உதவித் தொகையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும்.

யாழ்ப்பாணம் வந்திருக்கும் மேற்படி நிறுவனத்தின் விசேட பிரதிநிதிகள், அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து யாழ் அரசாங்க அதிகாரிகளுடனும், திணைக்களத் தலைவர்களுடனும் தேசிய புனர் வாழ்வுக்குழுப் பிரதிநிதிகளுடனும் இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆலோசனை நடத்துவர்.

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக, 'யு. எஸ். எயிட்' நிறுவனத்தின் மூன்று பேர் கொண்ட பிரதிநிதிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்திருக்கிறது.

நேற்று இந்தக் குழுவினர் யாழ் பல்கலைக்கழகம் உட்பட யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட பல இடங்களையும் நேரடியாகப் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தனர். (உ)

### முச்சந்தி முரளி



அப்ப... ... உவர் பிரேமர் உலக வங்கியிட்டைக் கடன் வேண்டி, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றப் போறார் என்டு சொல்லுங்கோ..!

## ஆறுகால்மடம் பகுதியில் சடலம்

யாழ்ப்பாணம், ஜன 31

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் அம்மன்கோவிலடியில் நேற்றுக் காலை எட்டு மணியளவில் இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது

சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட சடலம் அளவெட்டியைச் சேர்ந்த ரி சஜன் (வயது 23) என்பவருடையது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவர் வட்டுக்கோட்டைத் தொழில் நுட்பக் கல்லூரி ஊழியராவார். (ஒ 10-51)

## படையினரால் 8 ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஜன 31

கடந்த சனி இரவு கொழும்பு மாவட்டத்தில் பம்பலப்பிட்டி பொலீஸ் உட்பட மூன்று பொலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டபோது அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்ட 26 ஆயுதங்களில் 8 ஆயுதங்களைப் பாதுகாப்புப்படையினர் மீட்டதாக அறிவிக்கப்பட்டது. [ஒ]

## வறுமை ஒழிப்புத் திட்டம்: உலக வங்கி உதவும்?

கொழும்பு, ஜன 31

ஜனாதிபதி பிரேமதாஸாவின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு உலக வங்கியின் உதவி கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள உலக வங்கியின் 4 பேர் கொண்ட குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான திரு. ஹரிசுர்வால் இத்தகவலை வெளியிட்டார்.

உலக வங்கித் தலைவர் பார்பர் கொனபில், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் கொள்கையைக் (8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்தேவியில் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஜன 31

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற யாழ் தேவியில் கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டினர்.

மதவாச்சிக்கு அப்பால் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதாக (8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சந்தைப்பகுதியில் லொறியிலிருந்து பொருள் இறக்கத் தடைவிதிப்பு

யாழ்ப்பாணம், ஜன 31

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலும், நகரச் சந்தைப் பகுதியிலும் லொறிகளில் இருந்து [ட்ரக்குகளிலிருந்து] காலை ஏழு மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரை பொருள்களை இறக்குவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்திய அமைதிப் படையின் நகரக் கொமாண்டர் அலுவலகம் நேற்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் இதனை அறிவித்திருந்தது. [அ]

### சுபநேரம்

31-01-1989
தை-18
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
11.06 முதல் 12.36 வரை
ராகுகாலம்:
03.36 முதல் 5.06வரை

## புங்குடுதீவுப் பகுதியில் இரு இளைஞர்கள் மரணம்

யாழ்ப்பாணம், ஜன 31

புங்குடுதீவுப் பகுதியில் நேற்று இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானதாக அறிய வந்தது.

வான் ஒன்றில் வந்துகொண்டிருந்தோர் மீது மறைந்திருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் —

அத் தாக்குதலில் இருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## பாலத்தில் காவல் நின்ற ராணுவத்தின் மீது தாக்கு!

### சிப்பாயும் மற்றொருவரும் பலி!!

கொழும்பு, ஜன 31

அட்டுபெத்த - பிலியந்தலை வீதியிலுள்ள பாலம் ஒன்றில் காவலில் நின்ற இராணுவத்தினர் மீது நேற்று, இனந்தெரியாதோர் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இதில் இராணுவத்தைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் ஒருவரும் மற் (8 ஆம் பக்கம் பார்க்க)

### செய்திச் சாரம்

## ஐ. தே. க. ஆதரவாளர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன 31

நாவலப்பிட்டிக்கு அருகே உள்ள பவ்வாகம கிராமத்தில் மூவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரின் மாமனும் அவரது மைத்துனரும் உயிரிழந்தவர்களில் அடங்குவர். (உ-எ)

## துப்பாக்கிகள் கொள்ளை

கொழும்பு, ஜன 31

கண்டியில் இருந்து ஒன்பது மைல்களுக்கு அப்பால் உள்ள திகன மகாவலி பாதுகாப்பு நிறுவனத்துக்குள் கடந்த சனிக்கிழமை இரவு நுழைந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று, அங்கு இருந்த அதிகாரிகளை மிரட்டி பத்து ரிப்பீற்றர் துப்பாக்கிகளை கொள்ளையடித்துச் சென்றது. (உ-எ)

## சு. க. அலுவலகம் தீக்கிரை

கொழும்பு, ஜன. 31

வெலிகம நகரில் சுதந்திரக் கட்சி அலுவலகம் இனந் தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டது. (உ-எ)

## கடைகள் திறக்கப்பட்டன

குருநகர், ஜன 31

யாழ் கே. கே. எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரத்துச்) சந்திக் கடைகள் நேற்று திறக்கப்பட்டன.

கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து மேற்படி கடைகள் மூடிக் கிடந்தன. (ஒ-51)

## பாடசாலைகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன 31

யாழ் - நகரிலுள்ள பாடசாலைகள் சில நேற்றுக் காலை 9 மணியுடன் மூடப்பட்டன.

வேறு சில பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்து காணப்பட்டது அதனை அடுத்து அந்தப் பாடசாலைகள் நண்பகல் 12 மணியுடன் மூடப்பட்டன. (ஒ-எ)

## கோப்பாயில் ஊரடங்கு

கோப்பாய், ஜன 31

நேற்று முதல் கோப்பாய் வடக்குப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் இரவு 7 மணி முதல் மறுநாள் காலை 5 மணி வரை அமுலில் இருக்கும் என அமைதிப் படையினரின் அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டுள்ளது. (உ-72)

## வேட்பாளருக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு

கொழும்பு ஜன. 31

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இரவில் துப்பாக்கிகளைக்கொண்டு திரியக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பொலீஸார் இத்தடையை விதித்திருப்பதாக பி.பி.சி நேற்று அறிவித்தது.

இரவு நேரங்களில் நடமாடும் தீவிரவாதிகளை அடையாளம் காணுவதற்கு ஏதுவாகவே இத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

## தீவிர சோதனை!

யாழ்ப்பாணம், ஜன 31

நேற்று நகரின் பல இடங்களிலும் தீவிரசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சோதனை நடவடிக்கைகளில் சீருடை தரித்த மக்கள் தொண்டர் படையும், இந்திய அமைதிப் படையினரும் கூட்டாக ஈடுபட்டிருந்தனர். (உ-51)

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

கோப்பாய், ஜன 31

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கோப்பாய் சந்திக்கு அண்மையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இதன்பின்னர் இப்பகுதியூடாகச்சென்ற பொதுமக்கள் சிலர் தாக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-72)

## தபால் சேவகர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன 31

மாத்தறையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை தபால் விநியோகம் செய்து கொண்டிருந்த தபால் சேவகர் ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வெலிகமையில் ஐ.தே.க. அலுவலகம் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டது. (உ-எ)

## இந்தியாவும் ஆயுத ஏற்றுமதி

புதுடில்லி, ஜன. 31

ஆயுதங்களையும், பாதுகாப்பு உபகரணங்களையும் இந்தியா பெருமளவில் ஏற்றுமதி செய்யவுள்ளது.

ஆயுத ஏற்றுமதிக்கெனத் தனியான நிறுவனம் ஒன்றைஉருவாக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. கே. சி. பந்த் நேற்றுத் தெரிவித்தார். (அ)

## மீண்டும் முகாம்கள்

யாழ். நகரப் பகுதியில் அமைதிப் படையினர் புதிதாக முகாம்களை அமைத்து வருகின்றனர்.

அனேகமாக முன்னர் முகாம்கள் இருந்த இடங்களிலேயே இவை அமைக்கப்படுகின்றன. (ஒ-51)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Honda Reconditioned புதிய பழைய Model C-90, C 50, C 70, C D 50 Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. 390, மெயின் வீதி, பஸ்ரியன் சந்தி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (9139)

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் தேங்காய் எண்ணை ஆலைக்குரிய இயந்திரங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. ஏசியன் 'ஒயில் மில்' பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (9309)

பாவித்த தளபாடங்கள், அலுமரி, கட்டில் மெத்தை, றேடியோ, குளிர்சாதனப் பெட்டி, Record player, Filter, மேசை, செற்றி, டிவான், Gas cooker, Hot plate, புத்தக றுக்கை மற்றும் பலவித பொருட்களும் உடன் மலிவு விற்பனைக்குண்டு. 790, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர். [9142]

### பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனை

பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இல: 50, 3 ஆம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். (சேப்டிக்கும் மக்கள் வங்கிக்கும் இடையில்) (9308)

''மல்டி றேட்ஸ்'' இல. 234/C, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாக) உங்களுக்குத் தேவையான பிறிமா அத்துடன் கோப்பறேஷன் கோழித்தீன் வகைகள் சகலவற்றுடன் தேங்காய்ப் பிண்ணாக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (9104)

### விநியோகம்

சகல இன பேடு சேவல் புறொயிலர் R. I.R. (பிலிமத்) கறுப்புப்புள்ளி சேவல் குஞ்சுகளும் ஒவ்வொரு வியாழனும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. K. சக்தி, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, S. T. R. & சன் மாண்கடை, திருநெல்வேலி சந்தி. N. கணபதிப்பிள்ளை, டச்சுறோட், சாவகச்சேரி (9305)

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் 2ஆம் திகதி வியாழக்கிழமையும், Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க: சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (9238)

### Uplands Farm

இரண்டு மாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக் கூடிய (Dekalb) இன பிறவுண் சேவல் குஞ்சு [01-02-89] புதன்கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூ 4.50 கூடுதலாக எடுப்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. முன் கூட்டியே பதிவு செய்க இல. 9, சந்தையா லேன், கன்னுகம் [புகையிரத நிலையத்துக்கு அண்மையில்] [9125]

## வகுப்புகள்

108 Brown Road, அசேதன இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் [1-2-89] புதன் 6,30 a.m [திங்கள், புதன், வெள்ளி, 6-30 a.m]. [9245]

## தேவை

கொழும்பைத் தலைமைச் செயலகமாகக் கொண்ட பிஸ்கற்பக்கிங் ஸ்தாபனத்துக்கு பிஸ்கற் பக்கிங் செய்ய இளம் பெண்கள் தேவை (வயது 16-25) விரும்பத்தக்கது உடன் நேரில் வரவும். முன் அனுபவத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். 144/2 பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (9302)

### NEW CITY TRADERS

சகல விதமான வீட்டு மின் உபகரணங்கள், வயரிங் பொருட்கள். Rice Cooker, Gas Cooker, Fan, Ceiling fan, Hot plate, மூன்று சில்லு சைக்கிள், பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருள்கள், எவர் சில்வர், சில்வர் பொருள்கள், சைக்கிள் உதிரிப் பாகங்கள், மணிக்கூட்டு வகைகளுக்கு: New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/1537)

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள் சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும், எலக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக் கடிதங்கள் Bio Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும் ''ஷப்று'' சேவைப் பிரிவு இல. 19, 2ஆம்ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/1271)

Type writers- தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [Samy & Co - Shabra அருகாமையில்] [C/1362]

### றோணியோ

தரமான றோணியோ பிரதிகளை தமிழ், ஆங்கிலம் சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்; ''ஷப்று'' சேவைப் பிரிவு இல19, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/1272)

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

9-1-89 இலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட சகல வகுப்புகளும் 6-2-89 இல் மீண்டும் பழைய நேர சூசிப்படி ஆரம்பமாகிறது. S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9143)

புதிய பிரிவு காலை 6 — 7 30 மணி வரை திங்கள், புதன் நாட்களில் மட்டும். ஆரம்பம் 6-2-89. S B Iyar 12, வைமன் வீதி, நல்லூர் (9144)

### கணித மயூரதி வெளியீடுகள்

1989 பெப்ரவரி க. பொ. த. பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ரூ 12/50 ஆண்டு 7 ஆண்டு 8, ஆண்டு 10 ஆகியவற்றுக்கான கணிதப்பயிற்சிகள் ஸ்ரீ லங்கா, பூபாலசிங்கம் ஸ்ரீசுப்பிரமணியம், சுன்னாகம் துர்க்காஸ்ரோர்ஸ் மற்றும் புத்தகநிலையங்களில் விற்பனையாகின்றது. (9055)

## உதவி அரச அதிபர்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. கா. சந்திரசேகரம் புதிய வடமராட்சி உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டதை அடுத்து நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக வேலணை உதவி அரச அதிபர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் பதில் கடமையாற்றுவார் எனத் தெரிகிறது. (க-111)

## பதில் அதிபர்

கோப்பாய், ஜன. 31

கோப்பாய் வடக்கு சரவணபவானந்த வித்தியாலயத்தின் பதில் அதிபராக திரு க. சச்சிதானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-72)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா செல்வதுரை

மறைவு: 31 - 1 - 1987
திதி; 7 - 2 - 89

அன்புத்தாயே!
ஈராண்டுகள்
மறைந்தன - உன்
ஈரமான முகத்தை
நாம் மறக்கவில்லை.
தீராத துயரத்தை
தந்து விட்டு - நீ
திடீரென எம்மைப்
பிரிந்து விட்டாய்
நீ மறைந்தும் எமக்கு
யாரும் ஆறுதல்
இல்லையம்மா!.

உன்பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்.

80/4,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[9146]

# வடமராட்சி கிழக்குக்கு மின்சாரம் கிடைக்கும்

## நிதி ஒதுக்கப்பட்டது

தாளையடி ஜன 31

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கு முதல் முறையாக மின்சாரம் வழங்குவதற்கு நிதிஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து பணம்ஒதுக்கப்பட்டிருக்கிறது.

முதல் கட்டமாக வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணிக்கு, சோரன்பற்றிற்கு ஊடாகச்செல்லும் பாரிய வலுவினையுடைய மின்சார கம்பிகளிலிருந்து. மின்சார இணைப்பு வழங்கப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபை இதற்கான வேலைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகத்தெரியவருகின்றது. (க-144)

## லொறி மீது தாக்குதல்

கோப்பாய், ஜன 31

கடந்த வெள்ளிக்கிழமை மதவாச்சிக்கு சமீபமாக மற்றும் ஒரு லொறி மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் நீர்வேலி தெற்கைச்சேர்ந்த இ. கனகலிங்கம் என்பவர் கத்திக் குத்துக்கு உள்ளாகி காயம் அடைந்தார். (இ-72)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலைப் பரிசளிப்பு விழாவை பெப்ரவரி 10ஆம் திகதி நடத்த பெற்றோர் ஆசிரியர் சங்கம் தீர்மானித்திருக்கிறது. (இ)

## நன்றி நவிலல்

எங்கள் குடும்பப் பெருந்தகை இறைவரித் திணைக்களமுன்னாள் அலுவலர் காலஞ்சென்ற வைத்திலிங்கம்பிள்ளை கார்த்திகேசபிள்ளை அவர்கள் ஈசனடி அடைந்தபோது பலவகையிலும் உதவியவர்கள், ஈமச்சடங்குகளிற் கலந்து கொண்டவர்கள் அனுதாபச்செய்தியனுப்பியவர்கள், ஆறுதல் அளித்தவர்கள் ஆகிய உற்றார், உறவினர், நண்பர்கள், கோப்பாய் ஆசிரியர், கல்லூரியினர், பலதுறை அரச அலுவலர்கள் உள்ளிட்ட யாவர்க்கும் நாம் மனப்பூர்வமாய் நன்றி கூறுகிறோம்.

[8921] குடும்பத்தினர் யாவரும்

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



### பாலசிங்கம் ஈஸ்வரன் (ஈசன்)

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 25-07-1967 | 22-12-1988 |

ஈசா! நீ எம்மிடமிருந்து பிரிந்தாலும் உன் நினைவுகள் எம் மத்தியிலிருந்து என்றுமே நீங்கிவிடாது.

உன் பிரிவால் வாடு·,
உற்றார், உறவினர், நண்பர்கள்
கோண்டாவில். (9145)

## மாந்தை வடக்கு ப. நோ. கூ. சங்கம் அடம்பன்.

### கேள்விப் பத்திர மூலம் வெற்றுச்சாக்கு விற்பனை

மாந்தை வடக்கு, ப, நோ; கூ. சங்கத்தின் 3356 வெற்றுச் சாக்குகளும், 50 பேக்குகளும் விற்பனைக்கான முத்திரையிடப்பட்ட (சீல்) கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரம் அனுப்புவோர் மீளப்பெறக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/- மீளப் பெற முடியாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 25/-ம் செலுத்தி கேள்விப்பத்திரப் படிவங்களை 23-1-1989 தொடக்கம் 5-2-1989 வரை எமது சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 6-2-1989 ஆகும்.

கேள்விப்பத்திரங்கள் 11-2-1889 ஆம்திகதி காலை 9 30 மணிக்கு நடைபெறும் இயக்குனர் சபையில் திறக்கப்படும். எக் கேள்விக்காரருக்கும் திறக்கப்படும் திகதி தனிப்பட அறிவிக்கப்பட மாட்டாது. எனவே கேள்விக்காரர் குறிக்கப்பட்ட திகதியில் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

**GENERAL MANAGER,**
Manthai North M. P. C. S.,
Adampan.
[C/1162]

## பாடசாலைக் கட்டிட ஒப்பந்தம்

யாழ். தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்குப் புதிய மூன்று மாடிக் கட்டடம் அமைப்பதற்கான வேலைக்கூலி ஒப்பந்தம் (Labour Contract), தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடம் 07 - 02 - 89 செவ்வாய்க்கிழமைக்குமுன்பு கோரப்படுகின்றது.

இதற்கான வேலைக்கூறு விவரங்களை, பாடசாலை நேரத்தில், ரூபா 25/- கட்டணமாகச் செலுத்தி அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

— பழைய மாணவர் சங்கம்

(30 - 01 - 89) (8919)

உ
ஓம்
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருஷம் தை மாதம் 21-ஆம் நாள் (03 - 02 - 1989) வெள்ளிக்கிழமை காலை 9 10 மணி முதல் 10.30 மணி வரையுள்ள மீன லக்கின சுபவேளையில்

| எமது கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் | எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி |
|---|---|
| ✶ மகேந்திரவர்மன் ✶ | ✶ சுமதி ✶ |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |
| Son of Late **Mr. Satha Srinivasan** [Attorney At Law Ex D.R O 'Mamallapuram' Uduvil, Chunnakam] | Daughter of **Mr. Arirajasingham** (Post Office View, Kopay) |

திருவருள் துணைகொண்டு மணமாளில்லத்தில் திருமாங்கல்யம் தரித்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், உற்றார், உறவினர் யாவரையும் அன்புடன் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

வரவேற்புபசாரம்: 4 - 2 - 89 மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை மணமகனில்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| திருமதி செ. ஸ்ரீநிவாசன் ''திருத்தணி'' 521/7, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். | திரு. திருமதி அரிராஜசிங்கம் ''சந்திர வாசா'' கோப்பாய் தெற்கு. |

[9141]

## ★ தரமான கலர்ப்படப் பிரதிகள் ★

★ அதிகுறைந்த கட்டணத்தில்
★ மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச் சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்



நவீன கம்ப்யூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல் 3 முதல் 5 நாட்களில் விநியோகம்

ஷப்றுவை நாடுங்கள்

ஷப்று
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசிஎண்: 2 2071

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாள் விக்கிரக பிரதிஷ்டை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் புவனேஸ்வரி அம்பாள் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது.

நாற்பது வருடங்களுக்கு முன் இந்தியாவிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்ட இந்த விக்கிரகம் நயினை அம்பாள் ஆலய உள்வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை ஆலய பரிபாலன சபையினர் செய்து வருகின்றனர். (ச-167)

## புற்றுநோயால் பாதிப்புற்றோர் விடுதி வசதி

தெல்லிப்பழையில் புற்றுநோய்ச் சங்கம் 80 நோயாளிகளைப் பராமரிக்கக்கூடிய விடுதியை திறந்து வைத்துள்ளது.

இவ் விடுதியைப் பராமரிக்கவும், விடுதி ஊழியர்களின் ஊதியத்திற்கும் மருந்து மற்றும் உணவு வகைகளைப் பெறவும் பொதுமக்களின் நிதி உதவியை சங்கம் நாடுகிறது.

நிதியுதவி அளிக்க விரும்புவோர் காசோலைகளை 'வடமாகாணப் புற்றுநோய்ச் சங்கம்'' என்ற பெயரில் எழுதித் தலைவர் டாக்டர் மா. ஜெகநாதன் 383, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பலாமென சங்கத் தலைவர் தெரிவிக்கிறார். (ஒ-94)

### கிராம சேவையாளர்களால் விநியோகிக்கப்படும்

# அறிமுக அட்டை இல்லாததால் நிவாரணம் பெறமுடியாத நிலை

## தாமதித்துப் பதிந்தோர் அவலம்

யாழ்ப்பாணம், ஜன 31

கிராம சேவையாளர் பிரிவுகளில், பொதுமக்களுக்கு வழங்கவேண்டிய நிவாரண அறிமுக அட்டைகள் இல்லை.

இந்த அட்டைகள் இல்லாததால் காலம் தாமதித்து பதிவுசெய்தவர்கள் தமது மீளக்குடியமர்தல் நிவாரணப் பணத்தைப் பெறமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மீளக்குடியமர்தல் நிவாரணப் பணத்தைப் பெறுவதற்கு கிராம சேவையாளரினால் வழங்கப்படும் நிவாரண அறிமுக அட்டைகள் கட்டாயம் இருக்கவேண்டும் என வங்கிகளில் வலியுறுத்தப்படுகிறது.

ஆனால் சில கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு குறிப்பிட்ட அளவு அறிமுக அட்டைகளே வழங்கப்பட்டதாகவும் —அவை வழங்கப்பட்டு முடிந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் காலம் தாமதித்து தமதுபெயர்களைப் பதிந்த பலருக்கு அறிமுக அட்டைகள் கிடைக்கவில்லை.

இதன்காரணமாகப் பிந்திப் பதிந்த பல குடும்பங்கள் நிவாரணப் பணத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது [ஒ-10]

## பதவி உயர்வு

பருத்தித்துறை, ஜன 31

பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. கனகசபை சண்முகநாதன் உள்ளூராட்சி அமைச்சினால் உள்ளூராட்சி நிர்வாக சேவைக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். கடந்த வருடம் உள்ளூராட்சி நிர்வாக சேவை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தமிழர்களில் திரு. சண்முகநாதன் மட்டுமே உள்ளூராட்சி நிர்வாக சேவைக்குப் பதவி உயர்த்தப்பட்டவராவர்.

(ச - க -118)

## நெடுந்தீவுப் பகுதியில் வெங்காய விளைச்சல் குறைவு

நெடுந்தீவுப் பகுதியில் இம்முறை பெரும்பாலான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டிருந்தபோதும் வழமைபோல் எதிர்பார்த்த அளவு கூடுதல் விளைச்சல் கிட்டவில்லை.

பருவமழை பொய்த்துவிட்டதால் வெங்காய உற்பத்தி கணிசமான அளவு குறைந்து விட்டது.

எனினும் உற்பத்தியாளர்கள் பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. [ஒ-11]

## குமுதினிக்கு அடிக்கடி ஏற்படும் கோளாறு!

நெடுந்தீவு, ஜன 31

தற்சமயம் கடல் போக்குவரத்துச் சேவையில் உள்ள ஒரேயொரு அரச மோட்டார் படகான குமுதினி அடிக்கடி இயந்திரக் கோளாறுக்கு உள்ளாகிறது.

இதனால் நெடுந்தீவுப் பகுதி மக்கள் சில சமயங்களில் தாமதமாகவே தாம் செல்ல வேண்டிய இடங்களைச்சென்றடைய நேர்கிறது.

சேவையில் ஈடுபட்டிருக்கும்போது திடீரென ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளை இப்படகின் சாரதி துரிதமாகத் தீர்த்து வைத்து பிரயாணிகளைத் திருப்திப்படுத்திவிடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

(ஒ-111)

## கிராமிய தொழிற்றுறை அமைச்சின் அதிகாரங்கள் நாளை முதல் பரவலாக்கம்

கொழும்பு ஜன 31

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து இலாகாக்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் அதிகாரங்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபையிடம் நாளை முதல் ஒப்படைக்கப்படும்.

அமைச்சர் எஸ். தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபைச்சட்டத்துக்கு அமைய இந்த அதிகார மாற்றம் இடம்பெறும்.

ஏனையோருக்கு முன்மாதிரியாக எனது கடமையைச் செய்து காட்ட விரும்புகிறேன் - என்றும் அமைச்சர் சொன்னார்.

## பதவி ஏற்பு

யாழ்ப்பாணம், ஜன31

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. செ. இ. நித்தியராஜ் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவி ஏற்றுள்ளார். (ச)

## விபத்து

கோப்பாய் தெற்கு கத்தோலிக்க ஆலயத்தின் முன்பாக பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ் ஒன்று கல் ஏற்றிவந்த டிராக்டர் ஒன்றுடன் மோதியது.

டிராக்டர் சாரதி சிறு காயங்களுடன் தப்பினார் (க-72)

## இலவச நிதிக்கு எழுவர் தெரிவு

மானிப்பாய், ஜன. 31

மானிப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சபை கிராம சேவையாளர்பிரிவில், செவணசரண நிதியத்திலிருந்து தலா ஐயாயிரம் ரூபாவை இலவச நிதியாக பெற்றுக் கொள்வதற்கு ஏழு பேருடைய பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. (க- 90)

## கல்வயலில் சங்கீத ஆச்சிரமம் நிறுவ வேண்டும்

### திறப்பு விழாவில் பேச்சு

கல்வயல் கிராமம் தன்னகத்தே பல சங்கீத வித்துவான்களையும், பண்ணிசைப் புலவர்களையும் கொண்டிருக்கும் பெருமைக்குரியது. இங்கு சங்கீத ஆச்சிரமம் அமைவது சாலச் சிறப்பும் பொருத்தமுமாகும்.

இதனை இப்பகுதி மக்கள் நல்லமுறையில் பயன்படுத்தி இசையும், இறைபக்தியும் வளர முயலவேண்டும்.

இவ்வாறு பிரதம கல்வி அதிகாரி திரு. கு சோமசுந்தரம் கல்வயலில் இடம்பெற்ற இசை ஆச்சிரமத் திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார்.

வயலின் வித்துவான் ஸ்ரீ வைத்தீஸ்வர சர்மா ஆச்சிரமத்தைத் திறந்து வைத்தார்.

திவ்யஜீவன சங்கத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா உரையாற்றுகையில் இசை என்பது இறைவனோடு இசைவது என்பதாகும். இசை இறந்தோரை எழுப்பிய அற்புதங்கள் பல உண்டு.

பண்ணிசையாகி நின்றாய் போற்றி என்கிறோம்.

விஞ்ஞானிகளே ஏற்கும் அளவுக்கு இசை விலங்குகளை மயக்குவதுடனும் பயிர்ப்பயன்களையும் அதிகரிக்க வைக்கிறது என்றார். (ஒ-31)

## மகிழ்ச்சியானதொரு சூழ்நிலையில் கற்பித்தல் சிறந்தது

### கல்வி அதிகாரி உரை

யாழ்ப்பாணம், ஜன 31

மகிழ்ச்சியான தொரு சூழ்நிலையிலேயே கற்பித்தல் சிறப்பாக நடைபெறமுடியும். குறிப்பாக ஆரம்பக்கல்வி பயில வரும் மாணவர்களது விஷயத்தில் இது மிகவும் கவனிக்கப்படவேண்டும்.

மாணவர்கள் விரும்பக்கூடிய வகையில் செயலாற்றவிடும் போது தான் கல்வியில் எதிர்காலத்தில் அவர்களுக்கு நல்ல அக்கறை ஏற்படும்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற முதலாம் ஆண்டில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தும்போது மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் கூறியதாவது:-

''மாணவரது நிலையை மதிப்பீடு செய்து கல்வியில் அவர்களை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்தது.

மாணவரது நலன் கருதி ஆசிரியர் நாளாந்தம் கல்வி சம்பந்தமான தரவுகளைச் சேகரிக்க வேண்டும். தாம் பெற்ற அறிவைப் பயன்படுத்தி கற்பித்தலைக் கவர்ச்சிகரமாக்க வேண்டும்:

இப்படி அவர் கூறினார்.

இப்பயிற்சியில் தமிழ்மொழி, கணிதம், அழகியல்கல்வி, சூழல், இத்திரம், பொம்மலாட்டம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் முறை பற்றி அறிவுறுத்தலும் கலந்துரையாடலும் இடம்பெற்றன. (ச)

இலங்கை வங்கியின் பிள்ளைகளின் சேமிப்புத் திட்டத்தில் இன்றே சேருங்கள்.

உங்கள் பிள்ளையின் வளமான வருங்காலத்திற்கு வழிகோலுங்கள்!

உங்கள் பிள்ளைக்கு வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பணத்தேவைகளை அது நம்பிக்கையுடன் எதிர்நோக்க இப்போதிருந்தே நீங்கள் வழிசெய்வது உங்கள் முக்கிய கடமையாகும்.

கவர்ச்சிகரமான வட்டியை வழங்கும், இலங்கை வங்கியின் பிள்ளைகளின் சேமிப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி உங்கள் பிள்ளையின் பெயரில் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம், பலவருடச் சேமிப்பும் அத்துடன் சேரும் வட்டியும் [illegible] தேவையான [illegible] உதவும்.

இலங்கை வங்கியில், ஆகக் குறைந்த வைப்புத்தொகையாகிய ரூ. 100/- ஐச் செலுத்தி மிக இலகுவில் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு, இன்றே உங்களுக்கு அண்மையிலுள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரைச் சந்தியுங்கள்.

சந்தைப்படுத்தல் முகாமையாளர்
22-வது மாடி ஜனாதிபதி மாவத்தை
கொழும்பு-1

இலங்கை வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த வைத்தியம் தொடர்ந்தும் அவல நிலையில் அந்தரிக்க வேண்டுமா?

## வெறும் மருத்துவச் சாலைகளால் அதனை வளர்த்துவிட முடியாது

ஆயுள்வேத சபையின் (Ayurvedic Medical Council) தலைமைப் பீடம் கொழும்பு பொறளையில் இருக்கின்றது. அச்சபையின் நடைமுறை மொழி தனிச் சிங்களம். அச்சபை

**உதயன் மக்கள் சந்தி**

உறுப்பினர்களில் இருவர் மட்டும் தமிழ் பிரதேசிகள். தெரிவு மூலம் இச்சபையில் தமிழ் மருத்துவர்கள் அங்கத்தவராக முடியாதவாறு சட்ட ஒழுங்குகள் உள்ளன. தமிழ் மருத்துவர்களின் நியமனமான பிரதிநிதிகளுக்கோ அச்சபை நடவடிக்கைகள் தெரிய வராது இவர்கள் தெரியாத மொழியில் நடைபெறும் சபைக் கூட்டங்களில் கௌரவ பார்வையாளர்களாக வீற்றிருந்து திரும்புவார்கள்.

சுதேச மருத்துவர் எவரும் ஆயுள்வேத சபையினால் அங்கீகரித்து பதியப்படாது தொழில் செய்வது சட்டரீதியான குற்றம். தண்டிக்கவும் படுவார்கள். இவர்கள் அங்கு பதிய வேண்டுமானால் பல வலிசெயல் இன்னல்களுக்கூடாக பிரயாணம் செய்ய வேண்டும். பொருள் செலவு, தங்குமிட வசதிக்குறைவு இத்தியாதி.

ஏதோ பெயரளவில் உதவி ஆயுள்வேத ஆணையாளர்களாக அரசாங்க அதிபர்களை நியமித்திருப்பதாக தெரியப்படுத்தியுள்ளார்கள். ஆனால் எந்த அதிகாரமும் எமது அரசாங்க அதிபர்களால் நடைமுறைப்படுத்தப்படும் வாய்ப்பில்லை.

வட-கிழக்கு பகுதிகளைப் பொறுத்தளவில் ஆங்காங்கு சித்த மருத்துவச் சாலைகள் உள்ளூராட்சி மன்றப் பொறுப்

> வைத்திய சிரோமணி
> **ம. சோ. சுந்தரம்**
> வட இலங்கை சித்த ஆயுள்வேத மருத்துவர்கள் சம்மேளனம்.

புகளில் நிறுவப்பட்டுள்ளனவேயன்றி அவைகளைத் திறம்பட நடத்த தேவையான மருந்துகள், மருத்துவர்கள், உதவியாளர்களின் பற்றுக்குறை நிலவி வருகிறது.

பரம்பரை தமிழ் மருத்துவக் குடும்பத்தில் வருபவர் மருத்துவக்கலையை முறைப்படி கற்கு முகமாக மருத்துவக் கல்லூரிகளுக்குப் புக முடியாதிருப்பதைக் காணலாம் ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் விஞ்ஞான பாடங்கள் நான்கில் ஒரே தடவையில் தேறிய மாணவர்களே மருத்துவக் கல்லூரியில் புக முடியும். பரம்பரை மருத்துவக் குடும்பத்தில் வந்த மாணவர்களுக்கு இக் கல்லூரிகளில் பயிலும் வாய்ப்பில்லை.

ஏதோ அரசு உத்தியோகம் பெறலாமெனும் எதிர்பார்ப்பில் அத்தராதரம் பெற்றவர்கள் புகுகின்றார்கள். ஆனால் அரச பணியும் ஊதியமும் கிடைப்பதற்கு உத்தரவாதமில்லை இடையில் வேறு தொழில் வாய்ப்பை நாடி வகுப்பிலிருந்து வெளியேறுகிறார்கள்

ம. ஏ. எனும் தரப் பயிற்சியும் கிடைக்கும் வாய்ப்பு தமிழருக்கில்லை.

நமது சமூக முன்னோடிகளே இதனை நடைமுறைப்படுத்த முன்னிற்கவில்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்னிருந்தே சிங்கள மருத்துவ மாணவர்களுக்கு இவ் வாய்ப்புக் கிடைத்து வருகிறது

தமிழ் மருத்துவர்கள் மக்களுக்குப் பணி செய்து பின் வயோதிபத்தில் வாழ்வு வருவாயின்றி வருத்தப்படுகிறார்கள். அவர்களின் அநுபவ அறிவை மருத்துவ மாணவர்கள் பெற வாய்ப்பு அளிப்பதனால் இம் மருத்துவர்களும் மாணவர்களும் நன்மை அடையலாமே.

அந்நியராட்சிக் காலத்தில் எமது பாரம்பரிய தமிழ் மருத்துவக் கலைக்கு எப்படி கீழ் நிலை உண்டானதோ அந்நிலைக்கு இன்று தள்ளப்பட்டு வருவதைக் காணலாம்.

இந்த வைத்தியம் தொடர்ந்தும் அவல நிலையில் அந்தரிக்க வேண்டுமா? ★

# வித்தியின் தமிழ் ஆர்வமும், உணர்வும் அரசியல் தலைவர்களின் உந்துதளங்கள்

> **மக்கள் தீர்மானம்**
> அமரர் பேராசிரியர் வித்தியானந்தனின் மறைவு குறித்து தமிழ் பேசும் மக்களின் சார்பாக அவரது இறுதிச் சடங்குக் குழுவினர் நிறைவேற்றி இறுதிச் சடங்கன்று வெளியிட்ட இரங்கல் தீர்மானத்தை இங்கு வெளியிடுகிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்களின் மறைவு குறித்து நாம் எமது ஆற்றொணாத் துயரத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

1946 முதலே பல்கலைக்கழகத்தின் மதிப்புமிக்க ஆசிரியராக விளங்கிவந்த வித்தியானந்தன், இலங்கையின் உயர் கல்வியமைப்பிற் பெருமதிப்புக்குரிய ஒருவராகப் போற்றப்பட்டு வந்தார். முதலில் யாழ்ப்பாண வளாகத் தலைவராகவும் (1978). பின்னர் அது பல்கலைக்கழகமாக மாற்றப்பெற்ற பொழுது (1979) அதன் முதல் துணைவேந்தராகவும் கடமையாற்றிய பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் தமது பதவிக்காலத்தில் அந்த இளம் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான புலமைத் தளத்தையும் சனநாயகக் கண்ணோட்ட வளத்தையும் வழங்கினர்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நிறுவுகையும், ஆரம்ப கால வளர்ச்சியும் அவர் எடுத்த முயற்சிகளின் கனிகளே; விவசாய பீடம் நிறுவப்படுவதற்கு அவர் தலைமையிற் செய்யப்பட்ட திட்டங்களே இன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பொறியியற் பீடத்துக்காக அவர் மேற்கொண்ட ஆரம்ப வேலைகளே இன்று அது தவறாது நிறுவப்படுவதற்கான சூழலை ஏற்படுத்தின.

கலவரங்களில்லாதிருந்த இலங்கையின் மத்திய, தென்பகுதிகளிலிருந்த பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுக்கிடந்த வேளையில், உலகிலே மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களுள் ஒன்றெனச் சர்வதேசத் தொடர்புச் சாதனங்கள் நாளும் பொழுதும் அப் பாதிப்புக்களை வர்ணித்து நின்ற யாழ்ப்பாணத்தில், குழம்பாத நிர்வாகத்தில் தொடர்ந்தியங்கிய ஒரேயொரு பெரு நிறுவனம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகந்தான். அந்தச் சாதனை சாத்தியமானதே வித்தியானந்தன் என்ற கல்விமானுடைய ஆளுமையினால்தான்.

சக துணைவேந்தர்களிடையே பெருமதிப்புக்குரிய ஒருவராக அவர் விளங்கியமையினால் மூன்று வருடங்களுக்கொருமுறை நடக்கும் பொதுநலவாயப் பல்கலைக்கழகச் சங்கத்தின் வைபவத்தில் (1986—89) இவரே தங்கள் பிரதிநிதியாகச் செல்ல வேண்டும் என்பதற்காக இவரேயே துணைவேந்தர்கள் பணிப்பாளர் குழுவின் தலைவராகத் தெரிவு செய்தனர். அவ் வருடத்தில் அவர் ஆற்றிய சேவைச் சிறப்புக் காரணமாக அவர் அடுத்த வருடமும் தலைவராக்கப் பெற்றார். சக துணைவேந்தர்களின் கணிப்பில் வித்தியானந்தன் பெற்றிருந்த இடம் அது.

அவர் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்விச் சபை (Senate) யில் அங்கத்தவராக விளங்கினார்.

**சகலருக்கும்தலைமயன்**

கொழும்பு பேராதனைப் பல்கலைக்கழகங்களில் அவர் கடமையாற்றிய காலத்தில், பல்கலைக்கழகத்தின் சகல இன மாணவர்களும் இவரைத் தங்கள் வழிகாட்டியாக, இன்னல் தீர்க்கும் நண்பனாகப் போற்றி வந்தனர். வரலாற்றுப்புகழ்மிக்கபேராசிரியர்கள் மலலசேகரா, ஜெட்றிகோ, தலைமையில் ஜயதிலக மண்டப உப பாதுகாவலராகவும், பின்னர் விஜயவர்த்தன மண்டபத்தின் பிரதான பாதுகாவலராகவும் கடமையாற்றிய காலங்களில் இவர் மாணவர் மனதில் அவர்களின் 'தமையனா'கவே போற்றப்பட்டார். தமிழ் மாணவர்களுக்கோ சிங்கள மாணவர்கள் படிக்கும் காலத்திலும், பட்டம் பெற்ற பின்னரும் வித்தியானந்தன் சம்பந்தப்படாத வாழ்க்கையமைவு ஏற்படவில்லையென்றே கூறலாம்.

இலங்கைப் பல்கலைக்கழகம் அதன் புகழ் பூத்த பேராசிரியர்களான மலலசேகர, ரத்னசூரிய, கணபதிப்பிள்ளை, ஹெட்டியாராச்சி, மயில்



சு. வித்தியானந்தன்

வாகனம் போன்றோரின் கருத்துக்கள் மூலம் தேசியப்பாரம்பரிய உணர்வை ஊக்கி நின்ற அக்காலத்தில் 'வித்தியானந்தன்' சிங்களத்துக்குச் சரத்சந்திரா ஆற்றிய நுபோன்று தமிழின் பண்பாட்டுத் தனித்துவத்தை எடுத்துக் காட்டுவதற்கான களத்தைத் தளத்தையிட்டார் ''இராவணேசனும்'' 'மனமே'யும், ''கர்ணன் போரும்'' ''சிந்பாகு'' வும் இலங்கையின்நாடக வரலாற்றில் மாத்திரமல்லாது தமிழ்- சிங்கள தேசியட பிரக்ஞையின் வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுவனவாகவும் அமைந்தன.

ஈழத் தமிழரின் உண்மையான நாடக (கூத்து) மரபை மீட்டெடுப்பதற்கு வித்தியானந்தன் மேற்கொண்ட முயற்சிகள், ஈழத்துத் தமிழரிடையே அவர் தம் பண்பாடு பற்றிய பிரக்ஞையை வளர்ப்பதற்கு உதவின. தென்னிந்தியத் தமிழ்ப் பண்பாட்டுடன் ஒப்பநோக்கும் பொழுது ஈழத்துத் தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவங்கள் சில வற்றை வற்புறுத்துவதாக அமைந்த இக்கலை இயக்கம் அக்காலத்தே நடை பெற்ற இலக்கிய இயக்கத்தோடிணைந்து சற்றுப்பின் பீறிட்டுக் கிளம்பிய ஈழத்துத் தமிழரின் அரசியல் தனித்துவத்துக்கான, அரசியற் போராட்டத்திற்கான உணர்ச்சி நிறை பின்புலமாக அமைந்தது வித்தியானந்தனின் தமிழார்வமும், தமிழுணர்ச்சியும் அரசியல் தலைவர்கள் பலருக்கு உந்துதளமாக இருந்ததென்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும்.

1974 ஆம் ஆண்டில் அரச ஒடுக்குமுறைக்கு ஆளான நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டினை இவர் நடத்திய முறைமையும் அந்த ஒடுக்கு முறைக்கு இவர் முகம் கொடுத்த முறைமையும் இவரது தமிழுணர்வின் ஆழத்தையும் அநீதிக்கு அஞ்சாத வீரத்தையும் எடுத்துக் காட்டி. இவரைத் தமிழின் சின்னமாக்கின.

**அப்பாற்பட்டு நின்றார்**

ஈழத்துத் தமிழ்பேசும் மக்களிடையே நிலவும் மத, பிரதேச வாதங்களுக்கு அப்பால் அவற்றையெல்லாம் கடந்து நின்ற பெருமை பேராசிரியர் வித்தியானந்தனையே சாரும். முஸ்லிம்களின் தமிழ்ப் பணியை முனைப்புறுத்திக் காட்டிய இவர், மட்டக்களப்பின் அரங்கை மீளக் கண்டு பிடித்தார். மலையகத் தமிழரது கலைப் பாரம்பரியங்களை ஜனரஞ்சகப்படுத்தினார். மன்னாரின் கத்தோலிக்கக் கூத்து மரபுக்குப் புத்துயிரளித்தார். ஈழத்துத் தமிழ்ப் பிரதேசங்கள் ஒவ்வொன்றினதும் நாட்டுப் பாடல்களைச் சேகரித்தார்; வெளியிட்டார் ஈழத்துத் தமிழ் பேசும் மக்கள் என்ற கோட்பாட்டின் நடமாடும் சின்னமாக விளங்கினார். அந்தவகையில் இவர் ஈழத்துத் தமிழ் பேசும் மக்களின் முதல் மகனாகத் தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ் ஆகிய இடங்களில் [illegible] பட்டார். கலைத்துறையிலும், சமூகத்துறையிலும்இவர் ஆற்றிய பணிகளின் பெருமை காரணமாக இவரது தமிழ்புலமைச் சிறப்புக்கள் அவற்றிற்குரிய முனைப்புடன் விதந்தோதப்படாது போய் விட்டன. இவருடைய 'தமிழர் சால்பு' சங்க கால வாழ்வியல் பற்றிய அதிகார பூர்வமான ஆராய்ச்சி நூலாகும். சென்னையில் மூன்று தடவைகளும், ஈழத்தில் ஒரு முறையும் பதிப்பிக்கப்பெற்ற இந்நூலின் தமிழ் புலமைச் செல்வாக்கினைத்தமிழ்பயிற்றுவிக்கப் பெறும் உயர் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் காணலாம். வித்தியானந்தனின் இலக்கண வகுப்புக்கள், எல்லாக் காலத்தும் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் பயின்ற மாணவர்களுக்குத் தேன்குடமாக விளங்கின.

**மனிதாயதப் பண்பு**

வித்தியானந்தனை நினைக்கும்பொழுது எல்லோர் மனத்திலும் மேலோங்கி நிற்பது அவரது மனிதாயதப் பண்பே. தனக்குச் செய்யப்பட்ட எல்லாக் குற்றங்களையும் மன்னித்து, அவற்றையெல்லாம் மறந்து, உதவி கேட்போரின் இடம் தேடிச்சென்று உதவினார். தனக்குத் தெரிந்தவர்களின் துன்பம்; கவலைகளை தனக்கு வந்தவையாகக் கொண்டு துயர் துடைத்தார். காப்பாற்றினார். அதனால் சிலவேளைகளில் தானே துன்பங்களுக்கும் ஆளானார். அத்தகைய சிலுவைச் சுமைகள் பலவற்றை அவர் ஆழமான மனித நேயத்துடனும் தெய்வீகப் பொலிவுடனும் சுமந்துள்ளார். பிறருக்கு உதவச்சென்று தன்பெயரைப் பணயம் வைத்தார்.

இவரைப் போன்று, இன்னொரு கலைஞனோ ஆசிரியனோ, புலமையாளனோ, சமூகச் செயல் வீரனோ இலங்கையில் தோன்றலாம். ஆனால் இந்தப் பண்புகளுடன் மனிதநேயத்தையும், மானுஷிகத் தன்மையையும் இணைந்த ஒரு மானிட முழுமையை உருவகப்படுத்தி நிற்பவர் தோன்றுதல் அருமை இதுதான் வித்தியானந்தனை மறக்க முடியாத மாமனிதனாக்கி நிற்றது [illegible] புகழ் வாழும். ★

## ரூபா 4, 000 நிவாரணம்

1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சாவகச்சேரியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களால் சாவகச்சேரிச் சந்தையில் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கும் கடைக்காரர்களுக்கும் 4000 ரூபா நிவாரணப் பணம் கிடைக்கவிருக்கிறது

நகரசபையின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-13)

## அந்தோனியார்சிலை புதுப்பொலிவுடன்

மன்னார், ஜன. 31

கடந்த அசம்பாவிதங்களின்போது தள்ளாடி இராணுவத்தால் சேதமாக்கப்பட்ட தள்ளாடிச் சந்தியிலுள்ள அந்தோனியார் சிலை தற்போது புதுப்பொலிவு பெற்றுள்ளது

தள்ளாடியில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இச்சிலையிலுள்ள சேதங்களைச் செப்பனிட்டு, வர்ணம்தீட்டி, கண்ணாடிச்சட்டமிட்டு அழகுபடுத்தியுள்ளனர்.

(ச-ரி)

## முதலாவது பதிப்பு விரைவில்

நில அளவைத் திணைக்களம் தயாரித்துள்ள இலங்கைத் தேசப்படத்தின் முதலாவது பதிப்பு விரைவில் வெளியாக இருக்கின்றது.

ஒரு பிரதியின் விலை 3 ஆயிரம் ரூபா வெளிநாடுகளில் 150 அமெரிக்க டாலராகும்

தேசிய அட்லஸ் தயாரித்துள்ள 72 ஆவது நாடாக இலங்கை உலகில் இடம்பெறுகிறது தெற்காசியாவில் 2 ஆவது இடத்தைப் பெறுகிறது.

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம். ஜன.31

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான வீடமைப்பு நிறுவனத்தால் கோண்டாவில் வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் நடைபெற்றது.

அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் திரு. சேவியர் கொணருட்டே தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்துக்கான ஏற்பாடுகளை கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் செய்திருந்தது.

## மரம் நடுகை பற்றி சுற்றுநிருபம்

கலைஞாம், ஜன. 31

எமது நாட்டைச் செழிப்பாக்குவதற்கு அதிக மரங்கள் நட வேண்டியது அவசியம் நடப்பட்ட மரங்கள் வருமானத்தைக் கூட்டவும், மழையை அதிகப்படுத்தவும், நிழலை ஏற்படுத்தவும், விறகைப் பெறவும், நிலம் பாலைவனமாக மாறுவதைத் தடுக்கவும் உதவுகின்றன.

இத் திட்டத்தை ஆசிரியர்கள், மாணவர்களின் உதவியுடன் செயற்படுத்தும் பொழுது அதிக தொகையான மரங்களை குறைந்த செலவுடன் குறுகிய நாட்களில் நடுவதற்கு வசதி உண்டு

இவ்வாறு யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. சபாநாயகம், யாழ் மாவட்ட கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள், தோட்டக்கல்வி அதிகாரிகள், அதிபர்கள் ஆகியோருக்கு தேசிய மரம் நடும் வைபவம் தொடர்பாக அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(க-27)

திருமலையில்

## 4 இந்து ஆலயங்கள் உட்பட 7 ஆலயங்கள் புனரமைப்பு

திருகோணமலை ஜன 31

திருகோணமலையிலுள்ள 4 இந்து ஆலயங்களும், பௌத்த ஆலயம் ஒன்றும் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றும் முஸ்லிம் மத வழிபாட்டுத் தலம் ஒன்றும் மாகாண அரசால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மட்டக்தடியிலுள்ள வீரகத்திப் பிள்ளையார் கோயில் 1லட்சம் ரூபா செலவிலும், கிருஷ்ணன் கோயில் 2 லட்சம் ரூபா செலவிலும், சனீஸ்வரர் கோவில் 80 ஆயிரம் ரூபா செலவிலும், தொடுவாய் பிள்ளையார் கோயில் 1லட்சம் ரூபா செலவிலும் திருத்தி அமைக்கப்படும்.

இதேவேளை நகரின் மத்தியிலுள்ள ஜயசுமனாராம பௌத்த ஆலயமும், கன்னியாவிலுள்ள கிறிஸ்தவ தேவாலயமும் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

மொஹிதீன் ஜும்மா பள்ளி வாசல் 2லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

(இ-150)

**ஆட்கள் தேவை**

சோடாப் பெட்டி ஏற்றி இறக்க கூலி ஆட்கள் தேவை. நேரில் வரவும்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1409)

ஓம்
விராட் விஸ்வப் பிரம்மனே நம

**ருதுசோபன அழைப்பு**

அன்புடையீர் !

நிகழும் விபவவருடம் தைத்திங்கள் 19ஆம் நாள் [ 01-02-1989 ] புதன்கிழமை பகல் 9-25 மணி தொடக்கம் 11-00 மணி வரையுள்ள மீனலக்கின சுப வேளையில் எமது புத்திரி திருநிறை செல்வி

**நா. கலைவாணி அவர்களுக்கு**

ருதுசாந்தி செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தங்கள் குடும்பத்தினருடன் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்பு கூர்ந்து அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்
திரு. த. நாகராசாவும்
குடும்பத்தினரும்,

521/2 காங்கேசன்துறை வீதி;
யாழ்ப்பாணம். (9113)

**FORTUNA ENTERPRISES**

[ Labour Licence No 79 ]

Immediate Vacancies in Kuwait

**உடனடி வேலை வாய்ப்புக்கள் 250**

(1) Airport and Hospital cleaners
விமானநிலைய, ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்
சம்பளம்: 30 D
மேலதிக நேரவேலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

(2) Mechanics for Benz Cars 5
மெக்கானிக்ஸ் சம்பளம்: 70 KD

(3) Spray Painters 5
பெயின்ரேஸ் சம்பளம்: 70 KD

(4) Tinkers 5
ரிங்கஸ் சம்பளம்: 70 KD

(5) Heavy Vehicle Drivers with Kuwait Licence 50
கனரக சாரதிகள் குவைத் வாகனப் பத்திரத்துடன் சம்பளம்: 90 — 120 KD

(6) Heavy Vehicle Drivers with Local or Gulf Licence 50
கனரக சாரதிகள் உள்நாட்டு அல்லது அராபியநாட்டு வாகனப்பத்திரத்துடன்.
சம்பளம்: 60 KD

(7) Light Vehicle Drivers 50
சாதாரண சாரதிகள்
சம்பளம்: 45 KD

நாடவேண்டிய முகவரி:
யாழ்ப்பாணப் பிரதிநிதி

**இ. விஸ்வேஸ்வராயன்**
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(C/1405)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சாரணர் சிரமதானம்

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியைச் சேர்ந்த சாரணர் குழுவினர் உதவி மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. செ. குணராசாவின் தலைமையில் வட்டுக்கோட்டை, கோட்டைக்காடு அரசினர் மருத்துவ மனையில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் இவர்கள் பாசறை விழா ஒன்றையும் மாவட்ட உதவி ஆணையாளர் தலைமையில் கொண்டாடினர்.

பாசறை விழாவில் நாடகம்சாரணர் பாடல்கள் இடம் பெற்றன. [ச - 90)

## இடமாற்றம்

மாங்குளம், ஜன. 31

மாங்குளம் நன்னீர் மீன்பிடித் திணைக்களத்தில் கடற்றொழில் பரிசோதகராகப் பணிபுரிந்த திரு எஸ்; தவபாலரத்தினம் இங்கினியாகல நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். [க - 94]

## வறுமை ஒழிப்பு குழுக்கள்

கோப்பாய், ஜன. 31

ஜனசவிய வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் கிராமிய மட்டத்தில் குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-72)

## தோட்டிலடி வீதி

மானிப்பாய் ஜன 31

சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்துக்கு முன்பாக செல்லும் தொட்டிலடி வீதி திருத்தப்படாததால் பொது மக்கள் பெரிதும் கஷ்டமடைய வேண்டியுள்ளது.

இவ் வீதியில் அமைந்துள்ள பொதுச் சந்தையில் நாளாந்தம் சேரும் குப்பை தெருவோரத்தில் குவிந்து போக்குவரத்துக்கு இடைஞ்சலை ஏற்படுத்துகிறது. (க-90)

## மெய்வல்லுனர் போட்டி

மானிப்பாய், ஜன. 31

மானிப்பாய் கல்வி வட்டாரத்தில் உடற்பயிற்சிப் போட்டிகள், மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெறுவதற்கான ஆயத்தங்களை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் மேற்கொண்டு வருகிறார்.

வட்டார மட்டத்தில் உடற்பயிற்சிப் போட்டிகள் மார்ச் மாதம் 10 ஆம் திகதி இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இதற்கான விண்ணப்பங்களை பெப்ரவரி 14 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை வட்டாரக்கல்வி அதிகாரி கேட்டுள்ளார். (ச- 90)

## வளர்மதி வென்றது

யாழ்ப்பாணம், ஜன .31

அரியாலை யுத் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் மோதி வெற்றி பெற்றது.

இப் போட்டி அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெற்றது. (க)

### மரங்கள் தறிக்கப்படுவதால்

# நெடுந்தீவுப் பகுதியில் வரட்சி தோன்றும் ஆபத்து நிலைமை

நெடுந்தீவு, ஜன. 31

நெடுந்தீவில் குடிசனம் நிரம்பிய பகுதிகளிலும் காட்டுப்பகுதிகளிலும் உள்ள வேம்பு, பூவரசு போன்ற பலதரப்பட்ட மரங்களைத் தறித்து வெளியிடங்களுக்கு அனுப்புவது அதிகரித்து வருகின்றது

மழை வீழ்ச்சியின்றி வரட்சியாகக் காணப்படும் நெடுந்தீவில் மரங்களைத் தறித்து விடுவதால் நாளடைவில் இத்தீவகம் முற்றாகவே வரட்சி அடையும் அபாயம் சூழ்ந்துள்ளது,

இங்கிருந்து மரங்களை வெளியிடங்களுக்கு ஏற்றிச் செல்வது ஏற்கனவே தடுக்கப்பட்டிருந்த போதும் இப்பொழுது உதவி அரசாங்க அதிபரின் அனுமதியுடன் குறிக்கப்பட்ட அளவு மரங்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இவ்வாறு மரங்களை வெளியிடங்களுக்குஎடுத்துச் செல்பவர்கள் உதவி அரசாங்க அதிபரின் அனுமதிச் சிட்டை தமக்குச் சாதகமாக்கி தாம் இஷ்டப்பட்ட அளவு மரங்களை வெளியிடங்களுக்கு அனுப்புகின்றனர்.

தறிக்கப்பட்ட மரங்கள் நெடுந்தீவுத் துறைமுகத்தில் பெருமளவில் குவிக்கப்பட்டுக் கிடப்பதை அடிக்கடி காணக்கூடியதாக இருக்கிறது.

விறகுக்காகவும் தளபாடங்கள் செய்வதற்காகவும் மரங்களைத் தறித்து வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதை முற்றாகத் தடை செய்ய வேண்டும் எனப் பொதுத் தாபனங்கள் கருதுகின்றன. (ச- 111)

## கோழி வளர்ப்போர் அவதி

மண்டைதீவு, ஜன 31

மண்டைதீவு பகுதியிலுள்ள கோழி வளர்ப்போர் தற்போது உற்சாகம் குன்றிக் காணப்படுகின்றார்கள்.

தற்பொழுது கோழிகளுக்கு வழங்கப்படும் ''மாவி'' விலை அதிகரித்ததே இதற்குக் காரணம்.

இப்பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கோழித்தீன் வகைகளை கோழிவளர்ப்போருக்கு குறைவான விலையில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. [ச]

# தமிழரின் பாரம்பரிய கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

### யாழ். ஆயர் உரை

குருநகர் ஜன 31

தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படுதல் வேண்டும் கத்தோலிக்க சமயம் வளர்வதற்கு கலைகள் பல வழிகளில் உதவியுள்ளதால் அக் கலைகளை அறிந்திருப்பதோடு அவற்றை பயன்படுத்தி சமயத்தை வளர்க்கவும், மக்கள் நன்னெறிகளை அறியவும் உழைக்க வேண்டும்,

திருமறைக் கலாமன்றம் நாடக அரங்கக் கல்லூரியுடன் இணைந்து ஏற்பாடு செய்த 'நாடக அரங்கக்களப் பயிற்சியும் விரிவுரைகளும்'' நிகழ்ச்சியை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பிரதான வீதி மறைக் கல்வி மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

திருமறைக் கலாமன்ற நாடகப் பிரிவுப்பொறுப்பாளரும், பழம்பெரும் மேடை நாடக திரைப்பட நடிகருமான திரு. அ. பிரான்ஸிஸ்ஜெனம் ஈரவேற்றுப் பேசினார்.

திருமறைக் கலாமன்ற இயக்குனர் வண. பிதா நீ. ம. சவிரிமுத்து அடிகளார் தெரிவித்ததாவது:

கடவுளின் வடிவமே கலை; கலைக்கொடை அது கடவுளுடையது; திரும்பவும் அது கடவுளுக்கே செல்லுதல் வேண்டும்'' என்றார்.

வி.ஜே.கொன்ஸன்ரைன்,ஜி.பி பேர்மினஸ் ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து உதவி அரசாங்க அதிபர் எஸ்.பி. பாலசிங்கம் களப்பயிற்சி வகுப்புகளை சம்பிரதாய பூர்வமாக தொடக்கி வைத்தார். (இ 51 )

# தொழு நோயைத் தொலைப்போம்...



அன்றலர்ந்த பூவின்
அழகு மண மெல் இதழை
என்றும் இரு விரலால்
ஏந்தித் தழுவுதல் போல்,
இன்றே தொழு நோயை
இல்லாமல் போக்கி, இனி
நன்றாய் மனித குலம்
நலம் கமழப் பேணிடுவோம்!

வேளைக்கே கண்டு பிடித்து, முன் கூட்டிச் சிகிச்சை செய்தால், புதிய மருந்துகள் மூலம், ஊனங்களின்றித் தொழு நோயைக் குணப்படுத்தலாம்.

தொழுநோய் ஒழிப்பு இயக்கம் – சுகாதார அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமசேவை அலுவலகர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 31

மன்னார் மாவட்டத்தில் புனர்வாழ்வு பணிகளை மேற்கொள்ளும் கிராம சேவையாளர்களுக்கு பிரயாணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்றும்— பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட நிவாரணம் கோரும் படிவங்களுக்கு உரிய நிவாரணப் பணம் வழங்கப் படவில்லை என்றும்—

ஸ்ரீலங்கா ஐக்கிய கிராமசேவை அலுவலர்கள் சங்கத்தின் மன்னார் மாவட்டக்கிளை இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப் பட்ட அதிகாரிகளை கேட்டுள்ளது. (ச)க்


## வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

156|3, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்

# G.A.Q., B.A.

வகுப்புகள்

பொருளியல்: வரதராஜன்
தமிழ்: குழந்தைவேல்
இந்துநாகரீகம்: காரை சுந்தரம்பிள்ளை
மெய்யியல்: சந்திரராஜா
அரசறிவியல்: தமீம்

வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வியில் தனித்துவம் வாய்ந்த இவ் விரிவுரையாளர் குழு யாழ்நகரில் எமது நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பர்.

ஆரம்பம்: 4-2-89 சனி

2-00 p. m.

பல்கலைக்கழகப் பதிவுகள் அனைத்தும் எம்மால் செய்து தரப்படும்.

விபரங்கட்கு:

BECON

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (9283)



J3 M3 J.

எஸ்.பி.அன்ரன் வழங்கும் வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

அன்றும்!
இன்றும்!!
என்றும்!!!

உங்கள் பிரயாண ஒழுங்குகளை நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் வகுத்துத் தருவதில் வல்லவர்கள் என்ற பெயர் பெற்ற

## உங்கள் பயண அமைப்பாளர்
## எஸ். பி. அன்ரன்

வழங்கும் நற்செய்தி!

★ புதுவருடத்தில் ★

★ கனடா
★ ஜெர்மனி
★ பிரான்ஸ்
★ இத்தாலி
★ அவுஸ்திரேலியா

ஆகிய நாடுகளுக்கு நீங்கள் பத்திரமாகவும் நம்பிக்கையாகவும் பயணம் செய்வதற்கு நிச்சயமான பயண ஒழுங்குகளை அமைத்துத் தருகின்றோம்.

## எஸ். பி. அன்ரன்

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/ 1384)


பெரு மழை காரணமாக

# அம்பாறை மாவட்டத்தில் நெற் செய்கை பாதிப்பு

அம்பாறை, ஜன 31

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்த பெருமழை காரணமாக இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த மாவட்டத்தின் முக்கிய கிருஷிகப் பிரிவான நிந்தவூர்ப்பகுதியில் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல்கள் வெள்ளத்தில் அமிழ்ந்து முற்றாக நாசமடைந்துள்ளன.

இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்துள்ளதுடன், மீண்டும் விதைப்பு மேற்கொள்ள வேண்டிய அவலநிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இதேவேளை தொடர்ச்சியாகப் பெய்த மழையால் தாழ்ந்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வெள்ளப்பாதிப்புக்கு உள்ளாகினர். (க-14)

## பஜனைக் குழு

காரைநகர் ஜன 31

காரைநகர் திருமறைக்காடு அன்னை அகண்ட நாம பஜனைக் குழுவின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர். நா. ஞானசம்பந்தக் குருக்கள் தலைவர்: திருமதி ப. தவராணி, துணைத்தலைவர் திரு. க. குமாரராஜா, செயலாளர்; திரு. எம். பி. அருளானந்தம், துணைச் செயலாளர் செல்வி எம். நாகேஸ்வரி பொருளாளர்; சிவஸ்ரீ சா. சிற்சபேசன், துணைப் பொருளாளர்: செல்வி தில்லைராணி. (க-73)

# தோட்டத் தொழிலாளர் பிரச்சினை; இரு அரசுகளும் பேச்சு நடத்தும்

## பொதுத் தேர்தலின் பின்னர்

கொழும்பு, ஜன 31

மலையகத்தில் உள்ள இந்தியப் பிரசா உரிமை பெற்ற தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்குத் திருப்பியனுப்புவது தொடர்பான பேச்சுக்கள் பொதுத் தேர்தலின் பின்னர் இலங்கை-இந்திய அரசுகளுக்கு இடையில் நடைபெறவுள்ளன.

இந்தியப் பிரசாஉரிமை பெற்ற குறைந்தது 75 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் உள்ளனர்;

இலங்கைப் பிரசா உரிமை பெற்ற சுமார் 20 ஆயிரம் தோட்டத் தொழிலாளர் இந்தியாவில் தங்கியுள்ளனர்.

இந்தியாவிலே தொடர்ந்து தங்கியிருக்க விரும்பும் இலங்கைப் பிரசா உரிமை பெற்ற தொழிலாளருக்கு இந்தியப் பிரசாஉரிமை வழங்கப்பட வேண்டும் என்று இ. தொ. கா. கோரி வந்தது.

இதை இந்திய அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது.

ஆனால் இந்தியப் பிரசா உரிமை பெற்றவர்களில் இலங்கையிலேயே தொடர்ந்து தங்கியிருப்பவருக்கு இலங்கைப் பிரசா உரிமை வழங்க இலங்கை அரசு முன்வந்தால் மட்டுமே இ.தொ.காவின் கோரிக்கையை இந்திய அரசு அமுல் நடத்தும் என்று தெரிய வருகிறது.

இதனிடையில்— இந்தியா திரும்ப விரும்பும் இந்தியப் பிரசா உரிமை பெற்ற தொழிலாளருக்கு போக்குவரத்துச் செலவுகளை வழங்க இந்திய அரசு முன்வந்துள்ளது.

அரச தோட்டக் கூட்டுத்தாபனமும், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையும் அப்படித் தாயகம் திரும்பும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் இந்தியப் பணத்தில் 5 ஆயிரம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளன. (ஒ-எ)

## பாதசாரி கடவை

மானிப்பாய் சந்தைக்கு அண்மையில் இலங்கை வங்கிக்கு முன்பாகவும், மானிப்பாய் மகளிர் கல்லூரி பிரதான வாசலுக்கு அண்மையிலும் இரண்டு பாதசாரிக் கடவைகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மானிப்பாய் லயன்ஸ் சமூகம் மேற்கொண்டுள்ளதாக அதன் தலைவர் லயன் எஸ். பத்மநாதன் தெரிவித்துள்ளார். (க- 90)

## வயிற்றைவிடச் சிந்தனையை முன்னெடுப்பவன் எழுத்தாளன்

சிறு கதைத் தொகுதி வெளியீட்டில் உரை

ஊர் உறங்கும்போது கண்விழித்து எழுதிக்கொண்டிருப்பான் எழுத்தாளன். வயிற்றைவிட சிந்தனையை முன்னெடுப்பவன் அவன்.

தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி ஒரு வரிதானும் எழுதாதபோது. நம் உள்ளூர்ப் பத்திரிகைகள் நம் எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவது நல்ல ஆரோக்கியமான போக்கு ஆகும்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா துரை எங்கரசுவின் ''வாழ்க்கை ஒரு தேவை'' சிறு கதைத் தொகுதி வெளியீட்டில் ஆசியுரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

முரசொலி ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் ஆசியுரை வழங்கினார்.

திரு. வே. பூபாலசிங்கம் திரு. சிவலிங்கராசா ஆகியோரும் விமர்சன உரை நிகழ்த்தினர்கள். (ச-69)

## அத்தியார் இந்துக் கல்லூரி

அண்மையில் வெளியான ஜீ. சி. ஈ. உயர்தரப்பரீட்சையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் 21 மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மக்கள் முகம்

## ஓய்வூதியம் பெறுவோர் சங்கம்

முல்லைத்தீவு, ஜன 31

முல்லைத்தீவு மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் முல்லைத்தீவு கரசேரி மண்டபத்தில் அரசாங்க அதிபர் திரு க. பொன்னம்பலத்தினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் த. குணரத்தினம், செயலாளர்: திரு சி. சபாபதி: பொருளாளர் திரு க. முத்துக்குமாரசூரியர். [ச-92]

சேனையூர் மகாவித்தியாலயத்தில்;

# இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி

மூதூர் ஜன 31

அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் சேனையூர் மகாவித்தியாலயத்தில் பாடசாலையை விட்டு நீங்கிய இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சி இவ்வாண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் தொழிற் பயிற்சிக்கான உதவிகளை கல்வித்திணைக்களத்தினரின் அநுசரணையுடன் யு. என். எச். சி. ஆர் (U, N H, C, R) நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

இங்கு யுவதிகளுக்குக் கோழிவளர்ப்புப் பயிற்சியும் இளைஞர்களுக்கு மரவேலைப் பயிற்சியும் கற்பிக்கப்படுகின்றன.

இப் பயிற்சி வகுப்புக்கள் சனி ஞாயிறு தினங்களிலும் - வியாழக்கிழமை பிற்பகல் வேளையிலும் நடைபெறுகின்றன. (ச-98)

## மானிப்பாய் மகளிர் கலை கலா மன்றம்

யாழ்ப்பாணம், ஜன 31

மானிப்பாய் மகளிர் கலை கலாமன்றம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

மன்றத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர்;- திருமதி ரட்ணஜோதிஉபதலைவர் செல்வி அனுஷியா பாலசுப்பிரமணியம், செயலாளர் திருமதிகுமாரசாமி உபசெயலாளர்; திருமதி குமாரசிங்கம் தனாதிகாரி; திருமதி முத்துவேல் பிள்ளை. (சி)

## பரிபாலன சபை

அராலி ஜன 31

அராலி தரணை முருகமூர்த்தி கோயில் பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு மு யார்க்கண்டு உபதலைவர் திரு மு. கந்தையா காரியதரிசி திரு க. இரத்தினசிங்கம் பொருளாளர் உபகாரியதரிசி திரு ச மோகனதாஸன் பொருளாளர் திரு ச குணரத்தினம் பத்துப் பேர் ... யும் தெரிவு செய்யப்பட் ... (ச-22)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி



மாவிட்டபுரத்தைச் சேர்ந்த


திருமதி செல்லத்துரை செல்லம்மா

பிறப்பு: 03. 06. 1903 இறப்பு: 17. 01. 1989

காலஞ்சென்ற ம. செல்லத்துரை (Retd Tea Maker) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தியாகராசா, காந்திமதி ஆகியோரின் அன்பு மாமியாருமாகிய செல்லம்மா அவர்களின் அந்தியேஷ்டி வீட்டுக் கிரியைகள் 01. 02. 1989 (புதன் கிழமை) அச்சுவேலி தெற்கில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் உற்றார், உறவினர்கள், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திப்பவர்கள்.- மருமக்கள் வி. சண்முகம் (இளைப்பாறிய ஆசிரியர்), இராசமணி, சுந்தரமூர்த்தி. பேரப்பிள்ளைகள் வீரசிங்கம் (கணக்காளர், கச்சேரி, கிளிநொச்சி), தில்லைநாயகி, வரகுகநேசன் (இ. போ. ச. திருகோணமலை), திலகேஸ்வரி, தில்லைநடராசா (ஆட்பதிவுத் திணைக்களம்), இந்திராணி (ஆ. ப தி. கொழும்பு), தில்லைநாதன் (ஆசிரியர், யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி), மனோரஞ்சிதம், சசிலாதேவி, பூட்டப்பிள்ளைகள் சிவதரிசினி, குமார், சசாந்தன் ஆகியோர்.

தகவல்:
ச. தில்லைநாதன்.
அச்சுவேலி தெற்கு. (8916)

## ஓராண்டு நினைவஞ்சலி



சி. ரகுநாதன்
அன்னையின் மடியில்: 13 02.1965
திதி: 31.01.1989



க.சி.ஜெயேந்திரன்
அன்னையின் மடியில்: 27.02.1968
திதி: 01.02 1989

ஆண்டவன் அடியில்:
12.02.1988

அன்பாலும் பாசத்தாலும் எம்மை அரவணைத்துச் சென்ற
எமது அன்புச் செல்வங்களே! வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்தது போதும் என்று வானுலகம் சென்றீர்களோ!
எமது இதயச் செல்வங்களே கண்ணீர் தான் எமது காணிக்கை;

பெற்றோர்:
சி. சின்னத்தம்பி, காசிப்பிள்ளை
சகோதரங்கள்:
செல்வராசா, பத்மநாதன், இரவிச்சந்திரன்
மகள்:
சோபிதா
... (9137)

பெற்றோர்:
க. சின்னத்தம்பி, சரஸ்வதி
சகோதரங்கள்:
தேவிகா, சர்வேந்திரன், விஜேந்திரன்
மருமகள்:
சோபிதா,
உற்றார், உறவினர்;

மணற்பகுதி,
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:
இகலானும் இன்னாத எல்லாம் நகலானும்
நன்னயம் என்னும் செருக்கு.

பொருள்:
எல்லாத் துன்பங்களும் உண்டாவது குரோதந்தால்; எல்லா நல்ல பலன்களின் பெருமை வருவது மகிழ்ச்சி உண்டாக்கும் அன்புக்குணத்தால்.


உதயன்
உண்மை - அஞ்சாமை - ஆற்றல்

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
31. 1. 1989 த. பெ. இல52


# பழக்கம் பழையது!

தென்னிலங்கையில், கொழும்பு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இரவு ஒரே நேரத்தில் மூன்று பொலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன. பொலீஸார் சிலர் கொலையுண்டுள்ளனர். ஆயுதங்களும் பறிபோயுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தெற்கு இலங்கையில், குறிப்பாகத் தென் மாகாணத்தில் வன்செயல்கள் பெரும் அளவில் தலைவிரித்தாடின. அந்தத் தேர்தலில் மக்கள் வாக்களிப்பார்களோ என்று ஐயுறுமளவுக்கு அங்கு நிலைமை பயங்கரமாக இருந்தது.

என்றாலும் வாக்களிப்பு இடம்பெற்று புதிய ஜனாதிபதியும் தெரிவானார். தேர்தலைக் கண்காணிக்க வந்த சார்க் நாடு ஊச் சேர்ந்த கண்காணிப்புக் குழுவும் தேர்தலில் திருப்தி தெரிவித்து வாக்காளர்களைப் பாராட்டி அறிக்கையும் வெளியிட்டது

எனினும் தேர்தலில் ஒழுங்கீனங்கள் நடந்ததாக, ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு தெற்கில் பெரும் கலவரம் வெடிக்கும் எனப் பலரும் ஊகித்தார்கள். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை வன்செயல்கள் முற்றாக ஓய்ந்திருந்தன அது கண்டு தென்னிலங்கை மக்கள் பெரிதும் சந்தோஷம் அடைந்தனர்.

ஆயினும் ஒரு சில வார இடைவெளியின் பின்னர், வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதை போல, வன்செயல்கள் அங்கு தலைகாட்டின; மெது மெதுவாக வளர்ந்தன; இப்போது பெருகி வருகின்றன.

மூன்று பொலீஸ் நிலையங்களை ஒரே நேரத்தில் தாக்கும் அளவுக்கு வன்செயலாளர்கள் மீண்டும் இயங்கத் தொடங்கி விட்டனர்.

இடைப்பட்ட நாற்பது நாட்களிலும் அயர்ந்து போய் இருந்த பொலீஸ் பகுதி, இப்போதுதான் சோம்பல் முறித்துக் கொண்டு, உஷார் அடைகிறது!

முப்படைகளும் முனைப்புடன் செயற்பட உத்தரவாகியுள்ளது. அவசரகாலச் சட்டம் என்ற போதை மருந்து ஏறியதால், தலைகீழாக நின்று மக்களை வதைத்த இலங்கைப் படைகள், அந்தச் சட்டத்தை நீக்கியதும், காற்றுப் போன பலூனாகித் தொப்பென உப்பிக் கீழே விழுந்து கிடந்தன.

அவசர காலச் சட்டம் மட்டுமா 'உஷார்' தரும்? இதோ இருக்கவே இருக்கிறதே பொதுசனப் பாதுகாப்புச் சட்டம். அதன் கீழ் ''உங்களுக்கு வேண்டிய அதிகாரங்களைத் தந்தோம்'' என்று அரசாங்க மேலிடம் கூறிய தன் பின்னரும் பொலீசார் விழுந்து போன அதிர்ச்சி நீங்கி எழுந்திருக்கவில்லை!

மூன்று பொலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்ட பின்னர் தான் அதிகாரிகள் உஷார், தீவிரம் என்றெல்லாம் உருக்கொள்கிறார்கள்!

இலங்கைப் பொலீஸ் பகுதியின் ஆதியந்தமான குணாம்சமே, ''சிறட்பியக்பே'' அதுதான். அந்தந்த நேரத்தோடு மட்டும் தனது திட்டங்களையும், செயற்பாடுகளையும் மட்டுப்படுத்திக் கொள்ளும் பழக்கம் பொலீஸ் பகுதிக்குப் பழையது!

தேர்தலுக்கு இன்னும் பதினைந்து நாட்களே உள்ளன. இத்தனை மணி நேரத்தில் இத்தனை கொலைகள் என்று தெற்கில் பொது மக்கள், அரசியல்வாதிகளின் தலைகள் உருளுகின்றன வரவிருக்கும் வாரங்கள் இரண்டும் எப்படி இருக்குமோ என தென்னிலங்கை மக்கள் அஞ்சத் தொடங்கி விட்டனர்

நடைமுறையில் நடக்கப் போவது என்ன என்று எவருமே ஊகம் சொல்ல முடியாத நிலையில் பொதுத்தேர்தல் தொங்கிக் கொண்டிருக்கிறது!

## வார்ஸோ - நேட்டோ பேச்சுக்கள் மார்ச்சில்

வார்ஸோ, ஜன. 30

படைபலக் குறைப்புப் பற்றி நேட்டோ அமைப்பு நாடுகளும் வார்ஸோ அமைப்பு நாடுகளும் வருகிற மார்ச் மாதம் வியன்னாவில் கூடிப்பேசவுள்ளன.

இதனிடையில்- வார்ஸோ நாடுகள் தங்கள் படைப்பலம் பற்றிய புள்ளி விவரங்களை வெளியிட்டு உள்ளன. வார்ஸோ நாடுகளிடம் 35 லட்சம் துருப்புக்கள் உள்ளன. நேட்டோ நாடுகள் 63லட்சம் துருப்புக்களை வைத்துள்ளன. (எ)

# காபூலில் இடைக்கால அரசு; பெப்ரவரி 10இல் இறுதி முடிவு!

## கெரில்லாக் குழுக்களிடையே தீவிரமான பேச்சுக்கள்

காபூல் ஜன 30

ஆப்கனில் இருந்து சோவியத் துருப்புக்கள் முற்றாக வெளியேற இன்னும் பதினைந்து தினங்களே உள்ளன.

அதன் பின்னர் என்ன நடக்கப்போகிறது? என்பதை உலக நாடுகள் கூர்ந்து அவதானித்துக் கொண்டு இருக்கின்றன.

அதேவேளை — சோவியத் யூனியனில் இருந்து அடுத்தடுத்து அமைச்சர்கள் காபூல் சென்று டாக்டர் நஜிபுல்லா அரசுடன் பேச்சுக்கள் நடத்திவந்த வண்ணமுள்ளனர்.

சோவியத் பாதுகாப்பு அமைச்சர் காபூலில் இரண்டு தினங்கள் பேச்சுக்களை நடத்திவிட்டு கடந்த சனிக்கிழமை மாஸ்கோ திரும்பினார்.

இப்போது சோவியத்தின் முதலாவது துணைப் பிரதமர் காபூல் சென்றிருக்கிறார்.

துருப்புகக்ள் விலக்கப்பட்ட பின்னரும் காபூல் அரசுக்கு சோவியத் அளிக்கவிருக்கும் பொருளாதார உதவிகள் பற்றி இப் பேச்சுக்கள் அமையும்;

இதனிடையில் — ஈரானிய வெளிநாட்டு அமைச்சர் டாக்டர் அலி அக்பர் வேலாயடி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யப்போவதாக அறிவித்தார்.

வருகிற 15 இன் பின் காபூலில் உள்ள டாக்டர் நஜிபுல்லா அரசு வீழ்ச்சி அடைந்து விடும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்பிறகு அமைக்கப்படும் அரசு இஸ்லாமிய ஆட்சியாக அமைய வேண்டும் என்று ஈரான் விரும்புகிறது

இதற்கு முன்னோடியாக ஆப்கனில் அமைக்கப்படும் இடைக்கால அரசில் ஈரானில் இருந்து செயல்படும் முஜாஹிதீன் கெரில்லாக்களுக்கு பாதி இடங்கள் வழங்கப்படவேண்டும் என்று தெஹ்ரான் அரசவிரும்புகிறது.

இது சம்பந்தமாக பாகிஸ்தானில் இருந்து இயங்கும் கெரிலாக்குழுக்களுடன் இணக்கம் காணவே ஈரான் அமைச்சர் பாகிஸ்தான் செல்வதாக அறிவிக்கப்படுகிறது.

இடைக்கால அரசு எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி வருகிற 10 ஆம் திகதிஇரு தரப்பு கெரில்லா அமைப்புக்களும் தீர்மானிக்க உள்ளன.

வெளிநாடுகள் தங்களின் தூதரகங்களை மூடிவிடுவதன் மூலம் காபூலில்பீதியைப்பரப்பி உள்ளன என்று ஆப்கனிஸ்தான் அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. (-எ)

## யானைகள் படுகொலை

கென்யா நாட்டில் யானைகள் எண்ணிக்கையில்85 சதவீதம் குறைந்து விட்டது.

1974இல் இருந்து இதுவரை 35ஆயிரம் யானைகள் கொல்லப்பட்டன. யானைகள் எண்ணிக்கை குறைந்து விட்டதால் யானைகளை கொல்ல அரசு திடீர் தடை விதித்து உள்ளது.

கென்யாவில் அரப் மொய்தலைமையில் ஆட்சி உள்ளது. ஆபிரிக்க நாடான இங்குயானைகள் அதிகம். 40 ஆயிரம் யானைகள் இருந்தன.

1974 இல் திட்டங்கள் தீட்டப்பட்டு தந்தத்துக்காக யானைகள் கொல்லப்பட்டன. இதுவரை 35 ஆயிரம் யானைகள் கொல்லப்பட்டன

இப்போது சில நூறு யானைகள் மட்டுமே உள்ளதாக வன இலாகாவினர் கூறுகின்றனர்.

இப்போது அரசு விழித்துக் கொண்டுவிட்டது. யானைகளைக் கொல்ல தடைவிதித்து அரப் மொய் உத்தரவிட்டுள்ளார்.

யானைகளைப்பாதுகாக்க தனியாக ஒரு பிரிவை அரசு ஏற்படுத்தி உள்ளது.

## யானைக் கூட்டம் கிராமத்தை அழித்தது

கல்கத்தா, ஜன 30

ஆத்திரம் கொண்ட யானைக் கூட்டம் ஒன்று மேற்கு வங்காளத்தில் உள்ள ஒரு கிராமத்தையே அழித்தது.

வீடுகள் அனைத்தும் சேதமடைந்தன.

கிராம வாசிகள் காயமடைந்தனர். பெரும்பாலானோர் கிராமத்தையே விட்டு ஓடினர், கிராமவாசி ஒருவர், யானைக்குட்டி ஒன்றைப் பிடித்துக் கொண்டதைத் தொடர்ந்து யானைக் கூட்டம் வெறிகொண்டு இத்தாக்குதலை நடத்தியது.

யானைக்குட்டியை சம்பந்தப்பட்டவர்கள் விடுவித்த பின்னர் தான் யானைக்கூட்டம் கிராமத்தை விட்டு வெளியேறியதாக பி. பி. சி. அறிவித்தது, (எ)

## சீன கவலை

பீகிங், ஜன. 30

திபெத்தின் இரண்டாவது ஆத்மீகத் தலைவர் பஞ்சன்லாமாவின் மறைவுக்கு சீன அரசு அனுதாபம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள தலாய் லாமா, பஞ்சன்லாமாவின் மறைவு குறித்து கருத்து எதுவும் வெளியிடவில்லை. (எ)

## பூமி அதிர்ச்சிக்கும் அணு சோதனைக்கும் தொடர்பு உண்டா?

ஹம்பர்க், ஜன 30

பூமி அதிர்ச்சிக்கும் அணுக்குண்டுப் பரிசோதனைக்கும் தொடர்பு கிடையாது என்று நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

சோவியத் யூனியனில் அடுத்தடுத்து பூமியதிர்ச்சிகள் ஏற்பட்டன; ஏற்படலாம் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

நிலத்துக்கு அடியில் நடத்தப்படும் அணுக்குண்டுப் பரிசோதனைகளே இந்த பூமியதிர்ச்சிகளுக்குக் காரணம் என்று பரவலாகப்பேசப்படுகிறது.

இதுபற்றி ஆராய்ந்த மேற்கு ஜேர்மன் பூகர்ப்பவியலாளர் ஹெல்முட் ஈச்சிலே, இரண்டுக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்று அறிவித்திருக்கிறார். [எ]

## சூப்பர் ரக கம்பியூட்டர்

டோக்கியோ, ஜன. 30

சூப்பர் ரக கம்பியூட்டரை ஜப்பான் நிபுணர்கள் வடிவமைத்து உள்ளனர். மிகவும் நவீனமானது இது.

இந்த கம்பியூட்டரை தயாரித்துக் குவிக்கப் பெரும் திட்டத்தை ஜப்பான் ஏற்படுத்துகிறது.

இந்த கம்பியூட்டர் உலகத்திலேயே சிறந்தது என்று ஜப்பான் நிபுணர்கள் கூறுகின்றனர்.

மனித மூளையில் பதுங்கி உள்ள விஷயங்களை அது இயக்குவதை வெளிப்படுத்தும் திறன் கொண்டது இந்த கம்ப்யூட்டர்.

## எல்சல்வடோர் அரசுக்கு திருச்சபை வேண்டுகோள்

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்ற இடதுசாரி கெரில்லாக்களின் கோரிக்கையை நிராகரிக்க வேண்டாம் என்று எல்சல்வடோர் அரசுக்கு ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.

எல்சல்வடோரின் ஜனாதிபதித் தேர்தல் வருகிற மார்ச்சில் நடைபெற உள்ளது.

அதை செப்டம்பருக்கு ஒத்திவைத்தால் தாங்களும் தேர்தலில் பங்கு பற்றப் போவதாக இடதுசாரிக் கெரில்லாக்கள் அறிவித்திருந்தனர்

இதை கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி அரசு நிராகரித்து விட்டது:

தேர்தலை ஒத்திவைக்க அரசமைப்புச் சட்டம் இடம் தராது என்று அரசு காரணம் காட்டியது.

கெரில்லாக்களின் வேண்டுகோளில் சாதகமான அம்சங்கள் இருப்பதாக திருச்சபை அரசுக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறது.

## அகராதியின் அர்த்தமே வேறுதான்

மணிலா, ஜன. 30

'பிலிப்பினு' என்ற வார்த்தைக்கு ஒக்ஸ்போர்ட் அகராதியில் தவறான அர்த்தம் போட்டுள்ளதாக பிலிப்பைன்சில் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. இந்த அகராதியை தடை செய்ய அகினோ அரசு பரிசீலித்து வருகிறது.

'பிலிப்பினு' என்ற ஆங்கில வார்த்தைக்கு [illegible]

கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது:

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் சமீபத்தில் வெளியிட்ட அகராதியில் பிலிப்பினு என்றால் 'எடொமஸ்டிக்' என்று (குடும்பப்பாங்கான) அர்த்தம் கூறப்பட்டுள்ளது.

இப்படிப் போட்டது தவறு. பிலிப்பைன்ஸ் [illegible] தான் சரியான அர்த்தி [illegible]

## சூழலும் உலகில்

### 20லட்சம் ஆண்டு மனித எலும்புக் கூடு

பீகிங், ஜன 30

சீனாவில் 20லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாகக் கருதப்படும் மனிதஎலும்புக்கூடு (பெரிய பாறாங்கல் வடிவில்) பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இந்த மனித எலும்புக்கூடு மத்தியசீனாவில் சிசான் மாநிலத்தில் யாங்கிஸ் ஆற்றங்கரையில் பூமியில இருந்து தோண்டி எடுக்கபட்டது.

இந்த எலும்புக்கூடு 20 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தியது என்று அகழ் வாராய்ச்சி நிபுணர்கள் கூறிஉள்ளனர்.

இவ்வுண்மையைகண்டு பிடிக்க இவர்கள் எடுத்துக் கொண்ட காலம் 2 ஆண்டு.

இந்த எலும்புக்கூடு 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கிடைத்தது.

இந்தத் தகவலை சீனாவில் உள்ள பத்திரிகை 'ரென்மன்ரிபு' கூறியுள்ளது.

இந்த எலும்புக்கூடு கணக்கில்லாதஆண்டுகள் பூமியில் கிடந்ததால் இப்போது அது பெரிய பாறாங்கல்லைப் போல இறுகி உள்ளது.

இந்தக் கல்லில் மனித பற்கள் காணப்படுகின்றன: மண்டை ஓடு போன்றஉருண்டையான பகுதியும் காணப்படுகின்றது.

முழு மனித எலும்புக்கூடு இறுகி குறுகிய வடிவத்துடன் பாறாங்கல்லை போல உள்ளது

உலகத்திலேயே கிடைத்தமிகவும்பழமையான புராதன சின்னம் இது தான் என்று சீன நிபுணர்கள் கூறுகின்றனர்.

### அரபாத் அறிவிப்பு

வாஷிங்டன், ஜன.30

அதிபர் புஷ் அல்லது வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கரைச் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் ஒழிய அமெரிக்கா பேசமாட்டேன் என்று பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத் தெரிவித்தார்.

### தனியார் நிறுவனம் ரொக்கட் தயாரிப்பு

வாஷிங்டன், ஜன. 30

உலகத்தில் முதல் தனியார் ரொக்கெட் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட பரிசோதனைகள் முடிந்து விட்டன. சில நாளில் இது விண்ணில் பறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா உட்பட பல நாடுகள் இறங்கி உள்ளன இந்த துறையில் தனியார் இறங்கவில்லை இதற்கு நாடுகள் அனுமதிக்கவில்லை. எனினும் அமெரிக்காவில் மட்டும் தனியாரை ஊக்குவிக்க திட்டங்கள் தீட்டப்பட்டன. தனியார் நிறுவனங்கள் ரொக்கெட் தயாரிப்பில் இறங்க முன்னாள் அதிபர் ரீகன் அனுமதி அளித்தார்.

அமெரிக்காவில் 10 நிறுவனங்கள் விண்வெளி ஆய்வில் இறங்கி உள்ளன. இவற்றில் இல் ஸ்பேஸ் ஏரோஸ்பேஸ் கம்பெனி என்ற தனியார் நிறுவனம் முதன் முதலாக ஒரு ரொக்கெட்டை தயாரித்து உள்ளது.

ஆளில்லாத இந்த ரொக்கெட்டை விண்ணில்செலுத்த இந்தநிறுவனம் தீர்மானித்து உள்ளது. இதற்கான இறுதிக்கட்ட பரிசோனைகள் முடிந்து விட்டன.

# சோவியத் பயமுறுத்தல்; அமெரிக்கா எச்சரிக்கை!

மியூனிச் ஜன 30

சோவியத்யூனியனின் பயமுறுத்தல் இன்னமும் குறையவில்லை— இப்படி அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் ரவர் எச்சரிக்கை விடுத்தார்.

மியூனிச்சில் நடந்த மேற்கு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் திரு. டவர் நேற்று உரையாற்றினார் இது அவரின் முதலாவது கொள்கை விளக்க உரையாக இருந்தது:

சோவியத்யூனியனின் ராணுவப் பயமுறுத்தல் குறித்து மேற்கு நாடுகள் கவலையீனமாக இருக்கக் கூடாது என்றும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தினார்.

ஆயுதக் குறைப்புப் பற்றி சோவியத்யூனியனின் தன்னிச்சையான பிரகடனங்களை வெளியிடுவது உலக சமாதானத்துக்கு உண்மையாக அந்த நாடு உழைப்பதான அறிகுறி என்று எவரும் கருதக் கூடாது என்றும் திரு. டவர் சுட்டிக்காட்டினர்: (எ)

## நிர்வாண பெண் எம்.பிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

வெனிஸ், ஜன. 30

இத்தாலிய பெண் எம். பி ஒருவருக்கு ஐந்து மாதகால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆபாச நடிகையாக இருந்து, அரசியல்வாதியாக மாறிய இலோனா ஸ்டோலர் என்ற பெண் எம். பிக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டது.

வெனிஸ் நகரில் உள்ள சென் மாக்ஸ் சதுக்கத்தில் உள்ள குதிரைச் சிலையின் அருகில் நிர்வாண நிலையில் இந்த எம். பி காட்சியளித்தார்.

அது சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்கிலே அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார்:

இந்த எம். பியின் திரைப்படப் பெயர் 'சிகியோலினா' இவர் முன்னர் ஒருமுறை ஏரி ஒன்றின் அருகில் நிர்வாணமாகக் காட்சி அளித்ததற்காகத் தண்டிக்கப்பட்டார். (எ)

## ஈரானில் 6 மாதங்களில் ஆயிரம் பேருக்கு தூக்கு

லண்டன் ஜன 30

அரசியல் கைதிகளுக்கு மரணதண்டனையை நிறுத்தும்படி ஈரானை உலக நாடுகள் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தி உள்ளது

ஐ.நாவுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் மன்னிப்புச்சபை இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறது

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தின் பின்னர் ஈரானில் குறைந்தது ஆயிரம் அரசியல் கைதிகள் தூக்கிலிடப்பட்டும் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர் என்று மன்னிப்புச் சபை தெரிவித்திருக்கிறது. (எ)

## யேசுபிரான் உயிர்த்தது சரித்திர உண்மை

வத்திக்கான் நகரம், ஜன 30

யேசுநாதர் மீண்டும் உயிர் பெற்றெழுந்தார் என்பது சரித்திர உண்மை.

பரிசுத்த பாப்பரசர் தனது வாராந்திர கூட்டத்தில் முன்சண்டவாறு உறுதிப்படுத்தினார்.

வத்திக்கானில் ஒவ்வொரு புதன்கிழமையும் பாப்பரசர் யாத்திரிகர் மத்தியில் உரை நிகழ்த்துவது வழக்கம்.

கடந்த புதன்கிழமை நிகழ்த்திய உரையின் போது இதனைத் தெரிவித்தார்.

யேசுபிரான் மீண்டும் உயிர் பெற்றெழுந்தார் என்பதற்கு முரணாக தீங்கு விளைக்கும் கருத்துக்களைச் சிலர் பரப்புகிறார்கள். இதை நான் எதிர்க்கின்றேன்.

யேசுபிரான் உயிர்த்தது. ரோமன் கத்தோலிக்க விசுவாசத்தின் மறுக்கக்கூடாத அம்சமாக உள்ளது.

பைபிளின் புதிய ஏற்பாடு இந்த உண்மையை நிருபிக்கிறது.

இப்படி பரிசுத்த பாப்பரசர் தெரிவித்தார்.

## 'போபஸ்' சந்திரனில் சோவியத் விண்கலம்

மாஸ்கோ, ஜன 30

செவ்வாய்க்கிரகத்தை சோவியத் விண் கப்பல் வெற்றிகரமாகச் சுற்றி வருவதாக மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டது.

ஏழு மாதங்களுக்கு முன்னர் சோவியத் யூனியனால் அனுப்பப்பட்ட இவ் விண்கப்பல் 11 கோடிமைல்களைக்கடந்து சென்று செவ்வாய் மண்டலத்துக்குள் கடந்த சனிக்கிழமை இரவு (இலங்கைநேரப்படி)பிரவேசித்து செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி வலம் வர ஆரம்பித்தது:

இந்த விண் கப்பலில் இருந்து இன்னொரு கலம் செவ்வாயைச் சுற்றி வரும் 'போபஸ்' சந்திரனில் இறங்க ஏற்பாடாகியுள்ளது.

இரண்டொரு தினங்களில் அந்தக் கலம் 'போபஸில்' இறங்கி டெலிவிஷன் படங்களைப் பூமிக்கு அனுப்பும்.

அந்தப் படங்களை வைத்து 'போபஸ்' சந்திரனின் தரை அமைப்பு சூழல் முதலியனவற்றை சோவியத் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்த உள்ளனர்.

அதில் கிடைக்கும் தகவல்களை வைத்துத்தான் செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை சோவியத் யூனியன் செயற்படுத்த உள்ளது.

21 ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் செவ்வாய்க் கிரகத்துக்கு முதலாவது மனிதனை அனுப்ப சோவியத் யூனியன் திட்டமிட்டு உள்ளதுன் தெரிந்ததே. (எ)

## படைகள் வாபஸ்

ஜிப்ரால்டர், ஜன 30

ஜிப்ரால்டரில் இருந்து தனது படைகளில் அரைவாசியை விலக்கிக் கொள்ள பிரிட்டன் முன் வந்துள்ளது.

இது ஜிப்ரால்டரின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது: (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



✶ ஜோண்சன்

வெளியிணை இயந்திரங்கள் உதிரிப்பாகங்கள்

வலை, நூல், போயா

ருேலர் மடிநூல் வகைகளை பெற்றுக்கொள்ள

சேன். அன்ரனீஸ்.

63, பூதாதேயு வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்



# உதயன்

31 01 1989 செவ்வாய்க்கிழமை



வடபகுதி கடற்றொழிலாளர் கவனத்திற்கு! எம்மிடம்

ஜோண்சன் ✶ JOHNSON

வெளியிணை இயந்திரங்கள் உதிரிப்பாகங்களுடன்

ருேலர் மடிநூல் 2 மில்லி மீற்றர் வலை, நூல், போயா போன்ற கடற்றொழில் உபகரணங்களையும் மலிவு விலையில் வாங்கலாம்

சேன். அன்ரனீஸ்

40, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்


## இந்தியக் கப்டனுக மீண்டும் வெங்சர்க்கார்

புதுடில்லி, ஜன 31

மேற்கு இந்தியா செல்லவிருக்கும் இந்தியக்கிரிக்கெட் அணியின் கப்டனுக திலிப் வெங்சர்க்கார் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தியக் கிரிக்கெட் கவுன்ஸிலின் தெரிவுக் கமிட்டி பம்பாயில் நேற்று கூடியது.

அப்போது திலிப் வெங்சர்க்காரைக் கப்டனுக நியமிக்கும் தீர்மானத்தை ஐந்தே நிமிடத்தில் கமிட்டி ஏகமனதாக எடுத்தது.

இந்தியக் கிரிக்கெட் சபையின் செயலாளர் திரு ரன்பீர்சிங் இதனைத் தெரிவித்தார்.

மேற்கு இந்தியத் தீவுகளில் இந்தியக் குழு இரண்டரை மாதகாலம் தங்கி விளையாடும்.

இந்திய அணியில் இடம் பெறவிருக்கும் 22 வீரர்களின் பெயர்கள் இன்று (செவ்வாய்) அறிவிக்கப்படும். (உ-எ)

## தொண்டாவுடன் மற்ருெரு இந்திய வம்சாவளிப் பிரசை அமைச்சரவையில்இருப்பார்

கொழும்பு, ஜன 31

புதிய அமைச்சரவையில் என்னுடன் இன்னுெரு இந்திய வம்சாவளிப்பிரஜையும் அமைச்சராக இருப்பார்.

அமைச்சர் எஸ். தொண்டமான் இத் தகவலை வெளியிட்டார்.

இறக்வானை பரியோவான் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் பேசுகையில் முன் கண்டவாறு அறிவித்தார்.

புதிய நாடாளுமன்றத்தில் மலையக மக்களின் சார்பில் பத்துப் பேருக்குக் குறையாமல் இடம் பெறுவர்.

அமைச்சர் பதவியில் நான் வெறும் ஆமாம் சாமியாக இருக்கவில்லை; இருக்கப்போவதும் இல்லை.

எனது இனத்திற்காகத் தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்பேன்.

— இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னுர். (உ-எ)

### கோண்டாவில் பகுதியில்

## வாழை மரங்கள் வெட்டிச் சரிப்பு!

யாழ்ப்பாணம், ஜன 31

கோண்டாவில் பகுதியில் பல வாழைத் தோட்டங்களில் உள்ள வாழை மரங்கள் வெட்டிச் சரிக்கப்பட்டுள்ளன.

சடந்த சில தினங்களுக்கு முன் கோண்டாவில் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்தே இந்த வாழை மரங்கள் வெட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று கோண்டாவிலில் அன்னங்கைப் பகுதியிலும் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனை அடுத்து படையினர் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டதாகவும் அறியவந்தது. (ஒ-10)

## தியாகிகள் தினம்

புதுடில்லி, ஜன 31

காந்தி அடிகளின் நினைவு தினம் நேற்று இந்தியாவில் தியாகிகள் தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. [உ-எ]

### மாகணசபைக்குத் தெரிவான

## முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பொதுத்தேர்தலின் பின்பே பதவியேற்பர்

கொழும்பு, ஜன 31

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பொதுத் தேர்தலுக்கு பின்னர் சத்தியப் பிரமாணஞ் செய்து பதவி ஏற்பார்கள் என்று தெரிய வருகிறது.

உறுப்பினர் பதவிக்கு தெரிவான தினத்தில் இருந்து அடுத்து வரும் தொண்ணூறு தினங்களுக்குள் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்க வேண்டும் என்று மாகாண சபைகள் சட்டம் கூறுகிறது.

இக்கால எல்லைக்குள் பதவி ஏற்கத் தவறினல், பதவிகள் காலியானதாக மாகாண சபைகள் அறிவிக்க முடியும் என்று சட்டம் மேலும் கூறுகிறது.

காலியான இடங்களுக்கு மீண்டும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் தொண்டர் படைக்கு ஆட்கள் திரட்டப்படுவது பற்றி நிலவும் கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்தே முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பதவிப்பிரமாணஞ் செய்துகொள்ள மறுத்து வருகின்றனர்.

பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்தவுடன் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணஞ் செய்து பதவி ஏற்பர் என்றும்—

அதன் பின்னர் மக்கள் தொண்டர் சபை பற்றிய விஷயத்துக்குத் தீர்வு காணப்படும் என்றும் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு, கிழக்கு சபைக்கு அம்பாறையில் இருந்து யு.என்.பி. சார்பில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு சிங்கள உறுப்பினரான என். யசேந்திரா பல்மேவலா சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்துவந்தார். இப்போது உறுப்பினர் பதவியை அவர் ராஜினுமாச் செய்து விட்டார். (உ-எ)

## சிறந்த பாடசாலை ஒன்றுக்கு அடையாளமாக இருப்பவர் அதிபரே

### பிரிவுபசார விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 31

"பாடசாலையின் சிறந்த அடையாளமாக மக்கள் கண்களில் பிரதிபலிப்பவர் அதிபரே

ஒய்வுபெற்ற வண்/ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலய அதிபர் திரு. க. பிஞகபாணியின் பிரிவுபசார வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய நல்லூர் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைபவத்துக்கு பாடசாலையின் தற்காலிக அதிபர் திரு. கதிர்செல்வநாயகம் தலைமை வகித்தார்.

அவர் உரையாற்றுகையில்,

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து, மிகுந்த ஆர்வத்துடன் அறிவொளி பரப்பும் அரிய தொண்டில் பிஞகபாணி ஈடுபட்டு உழைத்தார்.

தண்டனையிலும் பார்க்க அன்புதான் மாணவரை நல்வழிப்படுத்தும் நல்ல சாதனம் என்பதைச் செயல் முறையில் காட்டினுர்.

வித்தியாலயத்தின் பொறுப்புக்களை ஆசிரியர்களின் தலைமையினுபவம் ஆர்வத்திற்கேற்ப பகிர்ந்தளித்து, அவர்கள் தமது கடமைகளைத் திறம்படச் செய்வதற்கு உறுதுணையாக செயல்பட்டு வந்தார் அதிபர்" என்ருர்.

உதவி ஆசிரியர் ஜனுப் எஸ். ஏ பஸீர் தமது பாராட்டுரையில்,

அதிபர் திரு க. பிஞகபாணிதமக்களிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில்,

'எனக்கு இன்று அளிக்கப்பட்ட கௌரவத்திற்கு முக்கிய காரணகர்த்தாவாகத் திகழ்பவர்கள் உதவி ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருமாவர்' என்ருர்.

வைபவத்தில் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய அதிபர் திரு கா. கணேசதாசன் திரு. சி. க. தம்பிராசா, திரு. ஆ. சி. தமிழ்செல்வன், உரப்புலம் மெதடிஸ்த மிஷன் அதிபர் திரு. எஸ். திருநாவுக்கரசு உட்பட ஆசிரியர்கள் செல்வி திரு. ஞானரஞ்சனி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்கள்.

இறுதியில் வித்தியாலய மாணவர்களின் நிகழ்ச்சிகளும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச்செயலாளர் திரு மா. கணபதிப்பிள்ளையின் நன்றியுரையும் இடம்பெற்றன. (இ-சி)

## ஒட்டுசுட்டான், ஓமந்தையில் இரண்டு புதிய 'குவாறிகள்'

யாழ்ப்பாணம், ஜன 31

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் வீதி அமைப்புவேலைகளுக்குத் தேவையான கருங்கற்களை பெற்றுக் கொள்வதற்காக ஒட்டுசுட்டானிலும் ஓமந்தையிலும் இரண்டு 'குவாறிகள்' அமைக்கப்பட்டு வருகின்றன:

வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி என்பவற்றின் நிதி உதவியுடன் வடமாகாணத்தில் வீதி அமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இந்த வீதிகள் கருங்கற்களினுலேயே அமைக்கப்படவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான கருங்கற்களை பெற்றுக் கொள்வதற்காகவே மேற்படி இரண்டு 'குவாறி'களும் துரிதமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

ஓமந்தையில் அமைக்கப்பட்டு வரும் குவாறி வெகு விரைவில் செயற்படத் தொடங்கும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு பாவிக்கப்படுவதற்குத் தேவையான வெடிப் பொருள்களைப் படையினரே நேரடியாக வழங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-ő)

## வர்த்தமானி அறிவிப்பு வெளியானது

கொழும்பு, ஜன 31

மக்கள் தொண்டர் படை அமைக்கப்பட்டதை அங்கீகரிக்கும் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் தொண்டர் படையின் கமாண்டராகச் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் திரு ரி. ஈ. ஆனந்தராஜா நியமிக்கப்பட்டார். (உ-)

### யாழ் தேவி...

1ம் பக்கத் தொடர்ச்சி)

வும்-

கொள்ளைக் கூட்டம் ஓடும் ரயிலில் ஆயுதத்தைக் காட்டி பல தமிழர்களிடமிருந்து லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றதாகவும் கூறப்பட்டது [உ]

### பாலத்தில் . . .

[1ம் பக்கத்தொடர்ச்சி]

ருெருவரும் கொல்லப்பட்டனர்.

கொலையுண்ட மற்றையவர் சரத் என்பவர் என பின்னர் அடையாளம் காணப்பட்டது. [ஒ]

### வறுமை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சடைப்பிடித்து வருகிருர்.

ஜனுதிபதியின் வறுமை ஒழிப்புத் திட்டம் பற்றி உலகவங்கிக்குழு ஆராய்ந்துவருவதாக திரு சுகர்வால் தெரிவித்தார். ]உ-எ

## அளம்பிலில் இளைஞர் சுட்டுக் கொலை

முல்லைத்தீவு, ஜன 31

முல்லைத்தீவு, அளம்பில், தங்கபுரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இளைஞர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சடலத்தைப் படையினரே எடுத்துச் சென்றனர் எனக் கூறப்பட்டது.

இறந்தவரின் பெயர் விவரம் எதுவும் தெரியவரவில்லை. (ஒ 92)

## நிவாரணம்

வடமராட்சி, ஜன 31

வல்லையில் பாதிப்புற்றவர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நிவாரணப் பொருள்களை வழங்கியது

30,000 ரூபா பெறுமதியான மருந்து வகைகள், பால்மா போன்றவற்றை வைத்தியசாலை உயர் அதிகாரி செல்வி எஸ் பத்மலோஜனி ... வாழ்வகத்துக்கும் வழங்கியது. (ஒ-60)

### தொலைபேசிகள் அவுட்!

## இராணுவ தலைமையகம் அருகே நாசகார வேலை

கொழும்பு, ஜன 31

கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்குச் சமீபமாகவுள்ள நிலத்துக்கு அடியிலான தொலைத் தொடர்பு கேபிள்கள் நாசகார சக்திகளால் 14 இடங்களில் வெட்டிச் சேதப்படுத்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதனுல் நகரின் முக்கிய பகுதிகளுக்கான தொலைபேசி மற்றும் டெலக்ஸ் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தொலைத் தொடர்பு திணைக்களத்துக்கு இதனுல் 40 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (ஒ)

## தூதரகம் மூடப்பட்டது

காபூல், ஜன 31

யுத்தத்தினுல் ஆப்கனில் நிலைமை மேலும் நெருக்கடியடைந்திருக்கிறது -

இதனுல் தலைநகரில் காபூலில் உள்ள தனது தூதரக அதிகாரிகளை தாயகம் திரும்பும்படி இந்தியா பணித்திருக்கிறது.

தூதரகத்தை முற்றாக மூடிவிடும் எண்ணம் இந்திய அரசுக்கு கிடையாது என்று அறிவிக்கப்பட்டது,

இதனிடையில் அமெரிக்காவின் தூதரகம் காபூலில் மூடப்பட்டது

இது சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்றில் தூதரகத்தின் உதவிச் செயலாளர் பேசுகையில், காபூல் நிலைமை சீரடைந்தவுடன் உடனே தூதரகம் திறக்கப்படும் என்று அறிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திரு. செல்லையா சபாரட்ணம்

இருபாலையைச் சேர்ந்த இளைப்பாறிய முன்னுள் அத்தியார் இந்துக் கல்லூரி அதிபரும், வலி. கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவரும், இருபாலை பாரதி கலாமன்ற தலைவருமாகிய திரு. செல்லையா சபாரட்ணம் 30-01 89 அன்று காலமானுர். அன்னுர் திருமதி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இரட்ணேஸ்வரன் (சிறி ருெம்ஸ் தொழிற்சாலை), பரமேஸ்வரன் (வட பிராந்திய போக்குவரத்துச் சபை), விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி, நளினி, சத்தியவதனி ஆகியோரின் மாமனுரும், குமரன், அகிலன், செந்தூரன், பிரெஷாந்தி ஆகியோரின் அன்புப் பாட்டனுருமாவார். அன்னுரின் ஈமக்கிரியை இன்று (31-01-89) நண்பகல் 12 மணியளவில் அன்னுரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,

திருமதி ச. சபாரட்ணம்

(மனைவி)

(9143)


WHEN YOU WANT TO OPEN THE RIGHT DOORS

IN SRI LANKA

REMEMBER

SHABRA

We have proved **S**tability

We have shown **H**onesty

We are very much **A**dvanced

We have the most **B**acking

We are so **R**eliable

Thats why we are on the move **A**head

For more details please contact:

**Shabra Unico Finance Limited**

207, Power House Road,

JAFFNA.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 31 - 01 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt.) Ltd 292/2 Navalar Road, Jaffna Tuesday 31st January 1989.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org